விலை ரூபா: 8.00
Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஐப்பசி 24 வியாழக்கிழமை (10.11.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 326




# அதி நவீன வானூர்திகள் நான்கு விடுதலைப்புலிகளிடம் உள்ளன

## புலனாய்வுப் பிரிவினர் எச்சரிக்கை

(கொழும்பு)


**தமிழீழ விடுதலைப்புலிகளின் வான் படையினரிடம் இயங்கு நிலையில் அதி நவீன நான்கு யுத்த வானூர்திகள் இருப்பதாக இலங்கை புலனாய்வுப்பிரினர் பாதுகாப்பு பிரிவினருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

இதில் ஒரு வானூர்தி இரட்டை இயந்திரம் பொருத்தப்பட்ட நிலையில் அதிநவீன தரத்தில் உள்ளதாக புலனாய்வுத்துறையினர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

நவீன போர்க் கருவிகளை கையாளும் பயிற்சி பெற்ற புலிகளின் படையணிகள் தற்போது விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக புலனாய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் விடுதலைப் புலிகளினால் 11 கப்பல்களில் ஆயுதங்கள் பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் தற்போது விடுதலைப்புலிகளின் படையணிகள் அனைத்தும் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும், அத்தோடு புதிய பல படைப்பிரிவுகளும் அவர்களினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் புலனாய்வுப்பிரிவின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ

## இந்திய முன்னாள் ஜனாதிபதி கே.ஆர்.நாராயணன் காலமானார்



இந்தியாவின் முன்னாள் குடியரசுத்தலைவர் கே.ஆர். நாராயணன் (வயது 84) நேற்று காலமானார். தென்னிந்திய மாநிலமான கேரளாவைச் சேர்ந்த இவர் தாழ்த்தப்பட்ட சமூகத்திலிருந்து இந்தியாவின் குடியரசுத்தலைவராக மிக உயர்ந்த பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் நபர் என்பது குறிப்பிடத்தக்கது.

சுதந்திரத்திற்குப் பிற்பாடான இந்திய அரசியலில் மிகமுக்கியத்துவம் வாய்ந்த காலகட்டத்தில் குடியரசுத்தலைவர் பதவியினை வகித்த பெருமை இவரைச்சாரும். (இ-4)

## யாழ்.பல்கலையில் நாளை மாணவர் எழுச்சி மாநாடு

மாணவர் எழுச்சி மாநாடு நாளை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

தமிழ் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தலைவர் ப.குணேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர்.

இம் மாநாட்டில் மாணவர்களின் கல்வி நிலை, பல்கலைக்கழக அனுமதியில் தமிழ் மாணவர்களுக்கு இழைக்கப்படும் துரோகம், இலங்கை கல்விக்கொள்கையில் உள்ள குறைபாடுகள், தமிழ்ப்பாடத்திட்டத்தில் மறைக்கப்பட்டவையும் நீக்கப்பட்டமையும், சுனாமியும் மாணவர் பாதிப்பும் போன்ற விடயங்கள் ஆராயப்படவுள்ளன. அத்துடன் மாணவர் எழுச்சிப்பிரகடனம் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது. (இ-130)

## டைனமற் வெடித்து குருநகர் மீனவர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பாலைதீவுக்கடற் பரப்பில் இடம்பெற்ற டைனமற் வெடிவிபத்தில் மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் நண்பகல் பாலைதீவினை அண்மித்த கடற்பரப்பில் இடம்பெற்ற இவ் விபத்தில் குருநகரைச் சேர்ந்த முடியப்பு அரியதாஸ் (வயது 50) என்ற கடற்றொழிலாளியே உயிரிழந்தவராவார்.

கடல் நீரினுள் அமிழ்ந்திருந்து கடலட்டை பிடித்துக்கொண்டிருந்த சமயம் ,இவர் கடல் நீரினுள் அமிழ்ந்திருப்பதை அறியாத வேறு சில கடற்றொழிலாளர்கள் கடலினுள் டைனமற் வெடியினை வீசி மீன்பிடிக்க முற்பட்ட போதே இச்சம்பவம் இடம்பெற்றதாக கூறப்படுகிறது. இச் சம்பவத்தில் உயிரிழந்தவரின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (இ-4)

## ஜயந்த பதவி விலகினார்



(கொழும்பு)

அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால தனது பதவியில் இருந்து இராஜினாமா செய்துள்ளார். இத்தகவலை சமாதான செயலகப் பேச்சாளர் சாமினி சேரசிங்க உறுதிப்படுத்தியுள்ளார்.கடந்த ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி அவர் சமர்ப்பித்த பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளதாக சாமினி சேரசிங்க குறிப்பிட்டார்.

தமக்குள்ள அதிக பணிகள் காரணமாகவே தாம் இம் முடிவினை எடுத்ததாக ஜயந்த தனபால தனது பதவி விலகல் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கடிதத்தை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி கடந்த 18 மாத காலமாக அரச சமாதான செயலகப் பணிப்பாளராக பதவி வகித்தமைக்கு ஜயந்த தனபாலவிற்கு தமது நன்றியைத் தெரிவித்தார். இதேவேளை ஐக்கிய நாடுகள் அமயத்தின் அடுத்த செயலாளர் பதவிக்கு இவர்போட்டியிட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந.4)

## வான்படை - கடற்படை உதவியுடன் வாக்குப் பெட்டி எடுத்துச் செல்லப்படும்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பின் பின்னர் வாக்குப் பெட்டிகளை கணக்கிடும் மத்திய நிலையங்களுக்கு அவற்றை எடுத்துச் செல்வதற்கு வான்படை மற்றும் கடற்படையின் உதவியினை தேர்தல் ஆணையாளர் கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு கடிதம் எழுதியுள்ளார். இதற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உடன்பாடு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உதவித்தேர்தல் ஆணையாளர் மற்றும் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஆகியோரை தேர்தல் ஆணையாளர் இன்றையதினம் சந்திக்கவுள்ளார். இது ஜனாதிபதித்தேர்தலுக்கு முன்னர் இவர்களுக்கிடையில் இடம் பெறும் இறுதிச்சந்திப்பு என்று தெரிவிக்கப்பட்டது. (இ-4)

## தேர்தல் ஆணையரின் யோசனையை அமுல் செய்ய நீதிமன்றம் அனுமதி

தேர்தல் ஆணையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட 10யோசனைகள் அடங்கிய திட்டத்தை அமுல்செய்ய உயர் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

வடக்கு – கிழக்கின் கட்டுப்பாடற்ற பிரதேச வாக்காளர்களுக்காக அமைக்கப்படவுள்ள கொத்தணி வாக்களிப்பு மையங்களின் நிமிர்த்தமே இவ்யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

இலங்கை முற்போக்கு முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் நெல்சன்பெரேரா தாக்கல் செய்த மனுவின் மீதான இடைக்காலத் தீர்ப்பு ஒன்றின் அடிப்படையில் இந்த அனுமதியை மூன்று நீதியரசர்களைக்கொண்ட குழு நேற்று வழங்கியுள்ளது.

கொத்தணி வாக்குச்சாவடிகள் அரசாங்க கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் அமைக்கப்படவேண்டுமென்று தேர்தல் ஆணையாளர் தமது யோசனையில் குறிப்பிட்டிருந்தார்.

இதனை நிராகரித்த உயர்நீதிமன்றம் குறித்த கொத்தணி வாக்குச்சாவடிகள் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் அமைக்கப்படவேண்டுமென்று உத்தரவிட்டது.

வாக்களிக்க வரும் மக்களுக்கு இரண்டு கட்டங்களாக போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டுமென்றும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அத்துடன் வாக்காளர்களை அடையாளம் காண்பது தொடர்பில் இறுதித்தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை குறித்த வாக்குச்சாவடியின் பொறுப்பதிகாரிக்கு உயர் நீதிமன்றம் வழங்கியுள்ளது. இந்த நிலையில் வழக்குத் தொடர்பான மேலதிக விசாரணைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆம் திகதி மீண்டும் நடைபெறுமென்று உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது. (ந-04)

## தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தமிழ்ச்செல்வன் சந்திப்பு இன்று

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சந்திப்பு ஒன்று இன்று இடம் பெறவுள்ளது.இச் சந்திப்பு விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் கிளிநொச்சியிலுள்ள புலிகளின் சமா தான செயலகத்தில் இன்று முற்பகல் 11 மணியளவில் இடம் பெறவுள்ளதாக கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகவும் அரசல் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டவரவுசெலவுத்திட்டம்தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது. (அ-7)




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# முதியோரை அரவணைப்போம்

இளமைப் பருவத்தை கடந்து உழைக்கும் உடல் தகுதியை இழந்த அனைவரும் முதியோர் எனும் வரையறைக்குள் உள்ளடக்கப்படுகின்றனர். இன்றைய கால கட்டத்தில் முதியோர்கள் எமது சமூதாயத்தில் சுமை எனக் கணிக்கப்படுகின்ற நிலமை காணப்படுகின்றது. இந் நிலைமையை தகர்த்தெறிய வேண்டியது எம் அனைவரினதும் பொறுப்பு மிக்கதொரு கடப்பாடாகும். உழைக்கும் வரை உழைத்து எமது பொருளாதாரத்தை உயர்த்தி விட்டு இன்று அதன் பலா பலன்களைப் பெறுவதற்குரிய உரிமையை இழந்தவர்களாக எமது முன்னோர்கள் காணப்படுகின்றனர்.

இதற்கான பிரதான காரணமாக எமது நாடு ஒரு யுத்த பிரதேசமாகக் காணப்பட்டமையைக் கூறலாம். நாட்டில் யுத்தம் ஏற்பட்டதும் பல இளைஞர்கள், யுவதிகள், வெளிநாடு செல்ல வேண்டிய நிலமை ஏற்பட்டது. தமது பெற்ற பிள்ளைகளை வெளிநாடு அனுப்பிவிட்டு, இன்று நடைப்பிணங்களாக எமது முதியோர்கள் ஆதரிக்க யாருமின்றி முதியோர் இல்லங்களில் வாடுவதனைக் காணலாம். எமது ஈழத்துக் கவிஞர் ஒருவர் இதனை மிகவும் அழகாக 'பூத்த கொடி பூக்கள் இன்றி தவிக்கின்றது பூங்குருவி துணைகள் இன்றி துடிக்கின்றது' எனும் பாடல் மூலம் எடுத்தியம்பியுள்ளார்.

இந்நிலைமையை எவ்வாறு தீர்க்கலாம் எனும் போது, ஒவ்வொரு பிள்ளைகளும் தம் பெற்றோர்கள் முதுமையை அடைந்ததும், ஒன்றில் தம்முடன் வெளிநாட்டுக்கு அழைக்க வேண்டும். அல்லது தாம் பெற்றோருக்குரிய கடமைகளைச் செய்வதற்காக தாயகம் திரும்ப வேண்டும். முதியோரைக் கனம் பண்ணுதல் எனும் பண்பாடு முன்னைய காலங்களில் வலுப்பெற்று இருந்ததனை அறிகின்றோம். ஆனால் தற்காலத்தில் முதியோரைக் கனம் பண்ணுதல் எனும் பண்பாடு மறைக்கப்பட்டு இருக்கின்றது இதற்கு தீர்வாக முதியோரைக் கனம் பண்ணுதல் எனும் செயற்பாடு பாடசாலை கல்வியூடாக எமக்கு போதிக்கப்பட வேண்டும் என்பதுடன், கீழ்மட்ட சமூதாயங்களுக்கு சமூக சேவை அமைப்புக்கள் சென்று முதியோா் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் ஈடுபடுதல் வேண்டும்.

இன்று நாட்டில் அரசாங்க உதவியுடன் முதியோர் இல்லங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந் நிலமை ஏன், பிள்ளைகளுக்கான முதியோர் பற்றிய தாற்பரியம் தெரியாத நிலையிலேயே தமது பெற்றோரை முதியோர் இல்லங்களுக்கு அனுப்பி வைக்கின்றார்கள்.

எமது தமிழ் பண்பாடு நிறைந்த யாழ்ப்பாணத்தில் கைதடியில் ஒரு முதியோர் இல்லம் இருக்கிறது. இது மிகவும் வேதனைக்குரியது. ஏனெனில், மிகப் பெரிய அளவில் அங்கு கைவிடப்பட்ட முதியோர்கள் காணப்படுகின்றனர்: இந் நிலமை மாற்றியமைக்கப்பட்டு முதியோர்கள் தமது பிளளைகளுடன் வாழுவதனையே சந்தோசமாக கருதுவதனால் முதியோர் பிள்ளைகளுடன் வாழுவதனை உறுதிப்படுத்துவதோடு, முதியோர் இல்ல அனுமதி என்பதனை விட பிள்ளைகளுடன் வாழ்தல் எனும விடயத்திற்கு தமது உதவிகளைத திருப்பிவிட வேண்டும் என்பது எனது கருத்தாகும்.

வடமராட்சி கிழக்கிலே ஒரு முதியோர் இல்லம் அமைப்பதற்கான முன்மொழிவு இருப்பதனை அறிகின்றோம். இச் செயற்பாடு கூட நாம் முதியோரை சுமையாகக் கருதியவர்கள் எனும் வகுப்பிற்குள் உள்ளடக்கப்படுகின்றோம்.

முதியோர் தொடர்பில் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் எனும் போது,

*நாம் காணும் முதியோரை சுக நலம் விசாரிக்க வேண்டும்.

*வீதியிலே தடுமாறும் முதியோர்களை கையில் பிடித்து வழிகாட்டல் வேண்டும்.

*பேருந்துகளிலே முதியோருக்கு நாம் எழுந்து இடமளித்தல் வேண்டும்.

மேற்கூறிய செயற்பாடுகளையும், ஆலோசனைகளையும் எமது சமூதாயத்தவர்கள் உணர்ந்து, எம் முதியோரைக் கனம் பண்ணி அவர்களை ஒரு சுமையாக அன்றி அவர்களை எமது வழிகாட்டுனர்களாக முன்நிறுத்தி அரவணைத்து உலகிலேயே தனித்துவமான முதியோரைக் கனம் பண்ணும் ஒரு சமூதாயமாக நாம் உருவாக வேண்டும்.

த.கௌசிகா

# வேட்பாளர்களின் சொத்து விபரங்களை வெளியிட தேர்தல் ஆணையாளர் மறுப்பு

## சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களது சொத்து விபரங்களைத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தொிவிக்க மறுத்ததற்கு சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது விடயம் தொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான கட்சி வேட்பளர்களான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரது சொத்து விபரங்கள் உள்ளிட்ட விபரங்களைத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கவிடம் ராவய ஆசிரியர் கோரியிருந்தார்.

ஆனால் இந்த வேண்டுகோளைத் தேர்தல் ஆணையர்ளர் நிராகரித்திருப்பது மிகவும் வருத்ததிற்குாியது.

தேர்தல் ஆணையத்தின் இந்த முடிவானது நவம்பர் 17ஆம் திகதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களது சொத்து விபரங்களை மக்கள் அறிவதைத் தடுக்கும் வகையிலான அவர்களது உரிமையை மீறுகிற செயற்பாடு ஆகும்.

இது தொடர்பான விபரங்களை அறிவதற்கான சட்டங்களையும் மீறுவதாக தேர்தல் ஆணையரின் முடிவு உள்ளது.

தேர்தல் ஆணையரின் இந்த முடிவுக்கு ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தும் அமைப்பு என்கிற வகையில நாம் வன்மையாக கண்டனம் தொிவிக்கிறோம் எனத் தெரிவிக்கபபட்டுள்ளது. (ற)

# மொறட்டுவ தொழில்நுட்ப நிறுவனத்தில் பாடநெறிகளைப் பயில 16 பேருக்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

மொறட்டுவ தொழில்நுட்ப நிறுவனத்தில் பாடநெறிகளைப் பயில்வதற்கு யாழ். மாவட்டத்தில் 16 பேருக்கு அனுமதி கிடைத்துள்ளதாக தொழில்நுட்ப நிறுவன உதவிப் பதிவாளர் அறிவித்துள்ளார்.


தகுதிபெற்றோர் பாடநெறிக்கான பதிவுகளை எதிர்வரும் 14, 15 ஆம் திகதிகளில் மேற்கொள்ளும்படி கோரப்பட்டுள்ளது. இது சம்பந்தமான கடிதங்கள் ஏற்கனவே பதிவுத்தபால் மூலம் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மொறட்டுவ தொழில்நுட்ப நிறுவனத்தில் பாடநெறிகளைப் பயில்வதற்கு அனுமதி பெற்றவர்களின் பெயர், முகவரி, பாடநெறி விபரங்கள் முறையே,

ரேணுகா - மே/பா, திரு.வி. சண்முகநாதன், தங்கஸ்தான், புலோலி தெற்கு, புலோலி - (CI), ஜனகன் - 52,வில்லி அவனியு, வெள்ளவத்தை, கொழும்பு -06 - (CI), ரஜீவ்குமார் - மே/பா.எஸ்.செல்வராஜா, சங்கானை றோட், அச்சுவேலி - (ME), ஜெயகாந் - இன்பர் சிட்டி, பருத்தித்துறை - (NT), றதீபன் - வி.ஜயவாசா, மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி - (CI), அமலராஜ் - ஒறுத்தபாய் லேன், தும்பளை, பருத்தித்துறை - (EE), தனஞ்செயன் - தலக்கன் தாய், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி - (CI), செந்தூரன் - சந்தரோதயம், இருபாலை கிழக்கு, கோப்பாய் - (CI), குமணன் - கமலவாசம், தும்பளை மேற்கு, பருத்தித்துறை - (CI), கிரிவர்ணன் - சிறிபதி, கண்டிவீதி, சங்கத்தானை, சாவகச்சேரி - (ME), இளங்கோ - கச்சாய் தெற்கு, கொடிகாமம் - (ME), சிறிவித்தியா - 34/3, இராமநாதன் வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம் - (PT), புஸ்பராஜ் - 22/3 திம்பிரி கஸ்யாய குறுக்கு வீதி, கெந்தலை, வத்தளை - (CI), கோகிலா - நந்தாவில் அம்மன் அருகில், கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் - (ME), மயூரன் - 126/1, அரசடி வீதி, யாழ்ப்பாணம் - (EE), சிவாகரன் - மீசாலை கிழக்கு, மீசாலை - (ME). (ற)

முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்வு 1924 07 09 — உதிர்வு 2004 11 10



அமரர் திரு. தர்மலிங்கம் பரராஜசிங்கம்

85 ஆம் நாள் நினைவு அஞ்சலி

மலர்வு 1937 12 08 — உதிர்வு 2005 08 17



அமரர் திருமதி. பரராஜசிங்கம் கிருஷ்ணவதி

உயிர் கொடுத்து உறவானீர் – எம்
உயிர் காக்க உணவானீர்

நோயற்று நாம் வாழ – தாயே
நோயுற்றுப் பாய் வீழ்ந்தீர்

தலை நிமிர்ந்து நாம் வாழ – நாளெல்லாம்
தவமிருந்தீர்
வரமெல்லாம் நாம் பெற்றோம்
வாழ்வெல்லாம் வரம் பெற்றோம்

தோள் நிமிர்ந்து வாழ்வினில்
துவண்டு விடா மனம் பெற்றோம்!

துணிவெல்லாம் வரப் பெற்றோம்!
சீரான சிதைந்துவிடா உளம் பெற்றோம்!
யார்கொடுத்தார் இத்தனையும் – உங்களைத் தவிர
பேர் கொடுத்து நிலைத்து நிற்கும்
பேறு கொடுக்கும் நீங்களல்லால் – சொக்கப்
பேறு கொடுக்கும் தெய்வம் உண்டோ

தந்தை தாயே நாமென்ன கொடுப்போம்
தேறாமல் தேம்பியழும் நெஞ்சமதில் தேக்கியே வைத்த
ஆறுபோல் அருகி வரும் கண்ணீரை மட்டுமே
உங்களுக்காய் விட்டோம்.

குடும்பத்தினர்.

# முதன்மை வேட்பாளர்கள் கட்சி வேறுபட்டாலும் பேரினவாதம் அவர்களை பிணைத்து நிற்கிறது

## -கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்

ஜனாதிபதித் தேர்தலை புறக கணிக்குமாறு கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இது விடயம் தொடர்பில் அச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில்,

சிங்கள, பௌத்த பேரினவாதமே ஸ்ரீலங்காவின் அரசியல் கலாசாரமாக விளங்குகிறது. கடந்த பல தசாப்தங்களாக பேரினவாதமே கோலோச்சுகிறது. ஸ்ரீலங்காவின் இந்த பேரினவாதக் கோட்பாடு தமிழினத்தை முற்றாகவே அழித்தொழிப்பதில், அரசியல் கட்சிகளுக்கிடையில் நடைமுறை சம்பந்தமான முரண்பாடுகளிலிருந்தாலும் அரசியலில ஒருங்கிணைக்கின்ற தந்திரோபாயத்தில் மட்டுமே வேறுபாடு காணப்படுகிறது.

ஜனாதிபதி வேட்பாளர்களில் முதன்மை வேட்பாளர்கள் வெவ்வேறு கடசிகள் சார்பில் போட்டியிட்டாலும் பேரினவாதம் அவர்களைப் பிணைத்து நிற்கின்றது.

ரணில, மஹிந்த ஆகியோரால வெளியிடப்பட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனங்களில் பேரினவாத அடிப்படையிலான அவர்களது அரசியல் கபடம் தெளிவாகப் புலப்படுகின்றது.

ரணில் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இனமுரண்பாட்டிறகான தீர்வுகாண்பதற்கு வழிமுறையாக தானே கைச்சாத்திட்ட ஒஸ்லோ ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள சமஷ்டி குறித்து எதுவுமே பேசவில்லை.

நவீன இராணுவத்தை அமைப்பது, கிழக்குக்கென தனியான நவீன போரியல் பிரிவு, எல்லைப் புறக் குடியேற்றங்களில் உள்ளவர்களுக்கென ஆயுதம் வழங்கப்பட்டு ஆயுதப்பிரிவுகளை அமைத்தல, தீர்வுத் தீர்மானங்கள ஏற்படின் அதனை பெரும்பான்மை முடிவுக்காக பொதுமக்கள் அபிபபிராய வாக்கெடுப்புக்குவிடல என்ற பெரும் சதிவலைப்பின்னல் ரணிலின் தேர்தல் விஞ்ஞாப்னத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அவரது வெளியிடப்படாத கசிந்து வெளிவரும் விடயங்கள் அவரது கடசியினாலேயே கக்கப்படும் தமிழின அழிப்புத் திடடங்கள் பல பத்திரிகைகளில் வெளிவருகின்றன.

மஹிந்த தமிழர் வரலாற்றுரீதியாக வாழந்த தாயகத்தை மறுக்கிறார்-சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளவில்லை. சுனாமி அனாத்த நிவாரணம், புனர்வாழ்வு கட்டமைப்பு புறந்தள்ளப்படுகின்றது. ஒற்றையாட்சியின் கீழேயே அதிகாரப்பரவலாக்கல் ஒரு தேய்ந்து போன கழுதையென இவரது பேரினவாத முழக்கம் நீளுகிறது.

இவருக்கு சாமரம் வீசும் ஒட்டுப்பேர்வழிகள் மத்தியில் கூட்டாட்சி வட-கிழக்கில் சுயாட்சி என்று விட்டு மஹிந்தவின் ஒற்றையாட்சிக்கு துதிபாடும் பலர் "பல்டி" அடிததுவிட்டனர் என்ற உண்மை புலப்படுகின்றது. சிங்கள தேசத்தின் ஜனாதிபதித் தேர்தல், தமிழீழ தேசத்தவரை அழிக்க நடாததபபடும் ஒரு அரங்கம். அதில கதாநாயகர்கள், வில்லன்கள், துதி பாடுபவர்கள் எனப் பலபல வேட தாரிகள் வருவர். இதில் தமிழ் பேசும மககளது அரசியல், வாழ்வுரிமைகள். ஒதுக்கப்பட்டுவிட்டன.

எனவே, ஜனாதிபதித் தேர்தலைப புறக்கணிப்பதே எமது இருப்பை, பாதுகாப்பை, சுதந்திரத்தை பேணுவதற்கான எமது விருப்பை வெளியிடுவதற்கான ஒரே வழிமுறையாகும். தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் நாம்கேட்டுக் கொள்வது ஜனாதி பதித் தேர்தலை வாக்களிக்காது புறக்கணித்து எமது தேசிய அபிலாஷையை வெளிப் படுத்து வோம் என்பதேயாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

## பெற்றோருக்கான கருத்தரங்கு

பெற்றோருக்கான கருத்தரங்கு ஒன்று அண்மையில் ஊர்காவற்றுறை புனித-மரியாள் வித்தியாலய அதிபர் அருட் செல்வி அ.எலிசபெத் தலைமையில் போரூட் நிறுவன மண்டபத்தில் நடைபெற்றது. ஊர்காவற்றுறை கிராம அபிவிருத்தி சங்கங்களிலுள்ள பெற்றோாகள் முப்பத்தி ஆறுபேர் கலந்துகொண்டனர். பெற்றோர்களுக்கு பிள்ளைகளின் மேல் உள்ள பொறுப்புக்கள் பற்றி அதிபர் விரிவாக தமது உரையில் எடுத்துரைத்தார். (அ-72)

## வேலைகள் பாதிப்பு

ஊர்காவற்றுறைப் பகுதியில் சில தினங்களாக பெய்துவரும் மழையினாலும் தொழிலாளர் வரவு குறைவினாலும் ஆஸ்பத்திரி வீதியில் கட்டப்பட்டுவரும் புதிய கட்டங்களின் வேலைகள் ஸ்தம்பித்துள்ளன. காரைநகர் பகுதியிலுள்ள மழை நீர் சேகரிப்பு தொட்டிகளில் வேலைசெய்யும் தொழிலாளர்கள செல்லாமையாலும பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக நீர் விநியோகப பொறுப்பாளர் நமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார். (அ-72)

## வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவருக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியே நிதியுதவி

(கொழும்பு)

வெளிவாரியாகப் பட்டப்படிப்பை தொடரும் மாணவர்களின் கல்விச செயற்பாட்டை விருத்தி செய்வதற கென ஆசிய அபிவிருத்தி வங்கி 90 மில்லியன் அமெரிக்க டொலா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

வெளிவாரியாக பட்டக் கல்வியைத் தொடரும் மாணவர்கள் திருப்திகரமான முறையில் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு ஏற்ற வசதிகளை சிறிலங்கா அரசாங்கமோ, திறந்த பல்கலைக்கழக நிர்வாகமோ ஏற்படுத்தவில்லை.

இதனால், மாணவர்கள் எதிர் கொள்ளக்கூடிய சிக்கல்களைத் தீர்த்து வைக்கவும், மாணவர்களின் கல்வி வளர்ச்சி செயற்பாட்டிற்கான ஆற்றல் விருத்தி நடவடிக்கைகளுககு உதவுவதற்கான திடடங்களை அமுல் செய்தவற்காகவுமே இந் நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கி ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் யாழ்பபாணம் மற்றும் வன்னிப் பிரதேச வெளிவாரி மாணவர்களது கல்வியை வளப்படுத்துவதற்கான ஏற்பாடுகளுக்கு முன்னுரிமையளித்து செயற்படுத்தவும், திட்டமிடப்பட்டுள்ளது என்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொலைக் கல்வி செயற்பாட்டு நிகழ்ச்சித்திடடத்தின் அதிகாரிகள் கூறினா். (அ)

## சுனாமி, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு வங்கிக் கணக்கு

(கொழும்பு)

ஆழிப்பேரலையால் மற்றும் வடக்கு-கிழக்கு யுத்தத்தால் பாதிககப்பட்ட சிறாருக்கான வங்கிக் கணக்கொன்றை அரசாங்கம் ஆரம்பிக்கவிருப்பதாக நிதி அமைசசர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.


நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்ட அறிக்கையைத் தாக்கல் செய்து அவர் பேசியபோது,

ஆழிப்பேரலை மற்றும் வடக்கு கிழககு யுத்தத்தால் பெரும் எண்ணிக்கையான சிறுவர்கள் தமது பெற்றோரை இழந்திருக்கிறார்கள். இப்பிரதேசங்களில் வசிக்கும் பெரும் எண்ணிக்கையான பிள்ளைகள் ஊனமடைந்தவர்களாயுள்ளனர். அவர்களைக் கவனிப்பதும் அவர்களின் வளர்ச்சிக்கு உதவுவதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

ஆகவே, அத்தகைய ஒவ்வொரு பிள்ளைக்கும் வங்கிக் கணக்கைத்திறந்து அவர்கள் 18 வயதினை அடையும்வரை அவர்களுக்கு ரூ.1,500 கொண்ட மாதாந்தக கொடுப்பனவு வழங்கப்படும்.

இக் கணக்கில் ஒன்று சேர்ந்த தொகை இப்பிள்ளை தொழில் பயிற்சி நிறுவனத்திற்குள் நுழையும்போது இருமடங்காகவும் பல்கலைக்கழகத்திற்கு நுழையும் போது மும்மடங்காகவும் அதிகரிககும். இத் திட்டத்தினை தொடங்க ரூ.200 மில்லியன் ஒதுக்கப்படும.

வங்கி அவற்றின் விரிவான கிளையமைப்புக்களினூடாக இதனை முகாமைப்படுத்தும் என்று குறிப்பிட்டார். (ற)





வன்னிப் பெருநிலப்பரப்பில் தொடர்ந்து பெய்துவரும் அடை மழையால் பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அவ்வப்பகுதிகளில் போக்கு வரத்துகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அப்பகுதி மக்களும் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்துவருகின்றனர்.

பரந்தன்-முல்லைத்தீவு பிரதான வதியில் 7ஆம் கட்டை புளியமபொக்கணைச் சந்தியில் இருந்து வட்டக்கச்சி செல்லும் முதன்மைச் சாலை வெள்ளத்தில் மூழ்கியுள்ளதைப் படங்களில் காணலாம்.

## இராசி பலன்

10. 11. 2005

(ஐப்பசி 24, வியாழக்கிழமை)

நவமி பிற்பகல் 4. 38 மணிவரை

அவிட்டம் முற்பகல் 7. 43 மணிவரை

இராகுகாலம் 1. 35-3. 05 மணிவரை

சுபநேரம் 7. 35-9. 05மணிவரை

| | |
|---|---|
| மேடம் | எடுத்த காரியம் கைகூடும், பெரியோர் உதவி, கீர்த்தி, போசன சுகம். |
| இடபம் | தொழில் நன்மை, நல்ல செய்தி, நிலை மாற்றம், எடுத்த காரியம் கைகூடும். |
| மிதுனம் | பிரயாணம், சரீரப்பிரயாசை, புதிய முயற்சி, வீண்பயம். |
| கடகம் | அபகீர்த்தி, காரிய தடங்கல், வாகன பயம், ஆரோக்கிய குறைவு. |
| சிங்கம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, காரிய நன்மை, போசன சுகம், சகோதரர் உதவி. |
| கன்னி | மனமகிழ்ச்சி, உடல் நலம், சத்துரு ஜெயம், எடுத்த காரியம் கைகூடும். |
| துலாம் | வியாபார நன்மை, சிறு வியாதி, தாழ்ந்த சுபாவம், முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | உடல் நலக்குறைவு, மனப்பயம், காரிய தாமதம், சுபசெலவு. |
| தனுசு | பிரயாண நன்மை, கூட்டு முயற்சி, பொருள் சேர்க்கை, உறவினர் உதவி. |
| மகரம் | மாதர் நட்பு, வேலைச் சுமை, முயற்சி தாமதம், அமைதிக்குறைவு. |
| கும்பம் | நல்ல முயற்சி, தேகநலன், சயன சுகம், தெளிந்த சிந்தை. |
| மீனம் | பிரயாண அலைச்சல், கலகம், காரிய தாமதம், சுபசெலவு. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

## திருமலை துறைமுகத்திற்குள் சென்ற படகிலிருந்த 22 சீனர்கள் கைது

திருகோணமலைத் துறைமுகத்தின் அதியுச்ச பாதுகாப்பு வலயத்திற்குள் அனுமதியின்றி நுழைந்த றோலர் படகு ஒன்று கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அதிலிருந்த 22 சீனர்கள் உட்பட 27 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இவர்களில் 5பேர் இலங்கையர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மீன்பிடிப்பதற்கான சட்டரீதியான அனுமதியைப் பெற்றுள்ள இந்தச் சீனர்கள் இலங்கை நிறுவனம் ஒன்றில் தம்மைப் புதிவுசெய்து கொண்டவர்கள் எனவும் தெரியவருகின்றது. (ற)

## வவு.இல் சோதனை அதிகரிப்பு

வவுனியாவில் பல்வேறு இடங்களிலும் தற்போது சோதனை நிலையங்கள் படையினரால் அமைக்கப்பட்டு தமழ் மக்கள் மீதான சோதனைக் கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொருவரையும் படையினர் துருவித்துருவி விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் தமிழ் மக்கள் மத்தியில் பீதியும் அசசமும் ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் 17ஆம் திகதி இடம்பெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலைக் காரணம் காட்டி இவ்வாறான சோதனைகளை படையினர் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படையினருடன், பொலிஸாரும், இணைந்தே சோதனை செய்ய வேண்டும் என்று படைத்தரப்புக்கு உததரவு போடப்பட்டிருந்த போதிலும் பொலிஸார் இன்றியே சோதனை நடவடிக்கைகளில் படையினர் ஈடுபட்டுவருகின்றனர். (ற)

## கணனிகள் அன்பளிப்பு

இலண்டனில் வசிப்பவரும் சாவகச்சேரி கோவிற் குடியிருப்பைச் சேர்ந்தவருமான இரத்தினம் இரவீந்திரன் அண்மையில் சாவகச்சேரிக்கு வந்திருந்த பொழுது பல இலட்சம ரூபா பெறுமதியான கணனிகளை பொது நிறுவனங்களுக்கு அன்பளிப்பாக வங்கியுள்ளார்.

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை, சாவகச்சேரி பொது நூலகத்துக்கு தலா ஒரு லப்டப்பும், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிக்கு 8லப்டப், 2 கணனிகளும் சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு ஒரு லப்டப்பும், மட்டுவில் ம.விக்கு ஒரு லப்டப்பும், நாவற்குழி ம.விக்கு 2 லப்டப்பும், தென்மராட்சி கல்வி வலயத்துக்கு ஒரு லப்டப்பும், வரணி ஆசிரியர் பயிற்சி நிலையத்துக்கு ஒரு லப்டப்பும் அவரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இவற்றைத் தவிர, அவரால் அன்பளிப்புச் செய்வதற்கென எடுத்துவரப்பட்ட ஒரு தொகை கணனிகள் இன்னமும் கொழும்பிலிருந்து வந்து சேரவில்லை எனபது குறிப்பிடத்தக்கது. (து-108)

# சச்சின் 40

## மீள் பார்வை

என். சொக்கன்

## ஒரு புயலின் கதை

அவரது உறுதியால் இந்தியாவுக்கு கோப்பை கிடைத்தது கூட சாதாரண விஷயம் என்று ஆகும்படி, அந்தப் போட்டித் தொடரில் சச்சினின் இரண்டு ஆட்டங்கள் என்றைக்கும் மறக்கமுடியாத ரத்தினங்களாக அமைந்துவிட்டன!



முதலில்நடந்த லீக் ஆட்டங்களில் இந்தியாவுக்குக் கிடைத்த தோல்விகளால் கடைசி லீக் போட்டியில் வாழ்வா, சாவா நிலைமை! இந்தப் போட்டியில் ஆஸ்திரேலியாவை ஜெயித்தால் இறுதிப் போட்டிக் குத் தேர்வு பெறலாம். அது முடியாமல் போனாலும், அதிக ரன் வித்தி யாசம் இல்லாமல் தோற்கவேண்டும். இல்லை என்றால் ரன் விகித அடிப் படையில் இறுதிப் போட் டிக்கு நியூஸிலாந்து தேர்வு பெற்று விடும்.

கடைசி லீக் போட்டியில் ஜெயிக்க வேண்டியதன் அவசியம் சச்சினுக்கு நன்றாகவே புரிந்திருந்தது. ஆஸ்திரேலிய அணியின் ஸ்கோர் எதுவாக இருந்தாலும் அதைத் துரத்தி வெற்றி பெற அவர் தயாராக இருந்தார்.

முதலில் ஆடிய ஆஸ்திரேலிய அணி, 284 ரன்களைக் குவித்தது. அடுத்து ஆடிய இந்திய அணிக்கு, 285 ரன்கள் கடினமான இலக்கு தான். 254 ரன்கள் எடுத்தாலே இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுவிடலாம் என்கிற புள்ளி விபரம் அவர்களுக்கு ஓரளவு ஆறுதலாக இருந்தது. ஆனால் சச்சினின் கண்கள் வெற்றியின் மேலிருந்து நகரவில்லை. ஒரு பக்கம் விக்கெற்கெற்றுகள் வீழ்ந்துகொண்டிருந்தாலும், சச்சின் தனது நம்பிக்கையை இழக்கவில்லை. தனது வழக்கமான பாணியில் வேகமாக ரன்களைச் சேர்த்துக் கொண்டிருந்தார். 31 ஓவர்களில் நான்கு விக்கெற் இழப்புக்கு 143 ரன் கள் என்ற நிலைமையில், ஆட்ட மைதானத்தை ஒரு மணற் புயல் தாக்கியது.

சச்சினின் புயல் வேக ஆட்டம் போட்டியை விறு விறுப்பாக்கிக் கொண்டிருந்த போது, இந்த நிஜப் புயல் ஆட்டத்தைத் தொடரமுடியாத படி செய்து விட்டது. இரு அணி வீரர்க ளும் மைதா னத்திலிருந்து வெளியேறி ஓட , ஆட்டம் நிறுத்தப்பட்டது. எல்லோரும் புயல் அடங் கக் காத்திருந்தார்கள்.

அப்போது இந்திய அணி, ஆஸ்திரேலியாவின் ரன் எண்ணிக்கையில் பாதியைத் தான் எடுத் திருந்தது. ஆகவே, மீதமிருக்கிற 19 ஓவர்களில், இந்தியா வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகளே இல்லை என்று எல்லோரும் முடிவு கட்டியிருந்தார்கள். இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறுவதற்கே இன்னும் 101 ரன்கள் தேவை. ஏற்கனவே நான்கு முக்கிய பேட்ஸ்மேன்களை இழந்துவிட்ட நிலை மையில் , அதற்கான வாய்ப்புக்களும் மங்கிப் போயிருந்தன.

மிகவும் தளர்ந்திருந்த பயிற்சியாளர் அன்ஷுமன் கெய்க்வாட்டிடம் சச்சின் சென்று பேசினார். "கவலைப்படாதீர்கள் சார்.நான் கடைசிவரை இருப்பேன். இந்தப் போட்டியில் நாம் ஜெயிக்கிறோம்" கடினமான அந்தச் சூழ்நிலையிலும் சச்சினின் குரலில் அசாத்திய உறுதி.

இருபத்தைந்து நிமிடங்களுக்குப் பின் மணற்புயல் ஓய்ந்தது. மீண்டும் ஆட்டம் துவங்கப்பட்ட போது, இந்திய அணிக்கு நான்கு ஓவர்கள் குறைக்கப்பட்டிருந்தது. நாற்பத்தாறு ஓவர்களில் 276 ரன்கள் எடுத்தால் வெற்றி. 237 எடுத்தால் இறுதிப்போட்டிக்கு தகுதி பெறலாம்.

தன்னுடன் விளையாடிக் கொண்டிருந்த லக்ஷ்மணை ஒரு முனையில் வெறுமனே பார்வையா ளராக நிறுத்திவிட்டு, ஆஸ்திரேலிய பந்துவீச்சை ஆவேசத்தோடு தாக்க ஆரம்பித்தார் சச்சின். பவுண் டரிகளும் சிக்ஸர்களும் பறக்க, வெற்றியை நோக்கி இந்தியா கம்பீரமாக நடைபோட்டது.



சச்சினின் உயர் தரமான ஆட்டத்தை, ஷார்ஜா மைதானத்தில் இருந்த ரசிகர்களும், முன்னாள் வீரர்களும் பிரமிப்போடு பார்த்தார்கள். ஆஸ்திரேலிய கேப்டன் ஸ்டீவ் வாவ், ஏதேதோ பந்துவீச்சு உத்திகளையெல்லாம் முயன்று பார்த்தார். எதுவும் சச்சினிடம் பலிக்கவில்லை. சச்சின் தனது சதத்தைப் பூர்த்தி செய்து, இந் தியாவை மெல்ல மெல்ல வெற்றிக்கு அருகே கொண்டு சென்றார்.

ஆஸ்திரேலியா பவுலர்களால் வீழ்த்தமுடியாத சச்சினை, கடைசியில் ஆட்டமிழக்கச் செய்தது, அம்பயர் ஒருவரின் தவறான தீர்ப்புதான் ஏமாற்றத்துடன் தனது பேட்டை வெறித்தபடி சச்சின் பெவிலியன் திரும்பிய போது அவர் எடுத்திருந்த ரன்கள் 143. அணியின் ஸ்கோர் 5 விக்கெற் இழப்புக்கு 242. சச்சின் ஒருவருடைய ஆட்டத்தால், இந்தியா ஏற்கனவே இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்று விட்டது.

சச்சின் ஆட்டமிழந்த பிறகு இந்தியாவின் ரன் வேகம் குறைந்து போக, 46 ஓவர்களில் 250 ரன்களைத் தான் எடுக்க முடிந்தது. ஆஸ்திரேலிய அணி அந்தப் போட்டியில் வெற்றி பெற்றது. ஆனால் நேரிலும், தொலைக்காட்சியிலும் சச்சினின் அன்றைய ஆட் டத்தைப் பார்த்து ரசித்தவர்கள், தங்கள் வாழ்நாளில் அதை மறக்க மாட்டார்கள். சச்சின் ஆட்டநாயகன் விருது பெற்றார்.

மணற்புயலும், சச்சினும் பரபரப்பூட்டிய அந்தக் கடைசி ஆட்டம் முடிந்து இரண்டு நாட்களுக்குப் பிறகு இந்தியா-ஆஸ்திரேலிய அணிகள் இறுதிப் போட்டியில் மீண்டும் சந்தித்தன. அன்றைய தினம் சச்சினின் இருபத்தைந்தாவது பிறந்த நாள். அதைக் கொண்டாடும் விதமாகவும், கொக்கோ-கோலா கோப்பையை வெல்வது என்று தான் ஏற் கனவே செய்து வைத்த தீர்மானத்தை நிறைவேற்றும் வகையிலும், சச்சின் அன்றைய ஆட் டத்தில் விளையாடினார்.

முதலில் ஆடிய ஆஸ்திரேலிய அணி, மீண்டும் ஒரு வலுவான ஸ்கோரை எட் டியது. இந்திய அணியின் வெற்றிக்கு 275 ரன்கள் என்ற இலக்கு நிர்ணயிக் கப்பட்டது.

அன்றை ஆட்டத்துடன் சச்சினின் ஆட்டம் தான் ரசிகர்களைக் கொள்ளை கொண்டது. 131 பந்துகளில் 134 ரன்கள் குவித்த சச்சின், கேப்டன் அஸாருதீனின் துணையோடு இந்திய அணியை பத் திரமாக கரைசேர்த்தார். இந்திய அணி கொக்கோ- கோலா கோப்பையை வென்றது. கோப்பையைப் பெற்றுக்கொண்ட அஸாருதீன், அதை சச்சினுக்கே சமர்ப்பணம் செய்வதாக நெகிழ்ச்சியுடன் அறி வித்தார்.!

(தொடரும்)

## கண்காணிப்புக்குழு-புலிகள் அம்பாறையில் சந்திப்பு

(அம்பாறை)

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சந்திப்பொன்று அம்பாறை மாவட்டவில் உள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயல கத்தில் நடைபெற்றுள்ளது.

இச் சந்திப்பில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தரப் பில் புஸ்போன் கிளாஸ்ஸஸ் அவர்களும் விடுதலைப் புலிகள் தரப் பில் அம்பாறை மாவட்ட மக்கள் தொடர்பாடல் பொறுப்பாளர் ஐயா மற்றும் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயா மோகன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

இந்தச் சந்திப்பின் போது காஞ்சிரங்குடா அதிரடிப்படையினர் அண் மைக் காலமாக மக்களை வெறுப்பூட்டும் விதத்தில் முக்கியமாக பெண்களுடன் தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தி இழிவாக நடந்து கொள்கின்றமையை சுட்டிக்காட்டியுள்ள விடுதலைப் புலிகள் இதுகுறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தீர்க்கமான முடிவினை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர். (இ)

## பதவிக்காலச் சாதனை பற்றி ஜனாதிபதி சந்திரிகா பெருமிதம்

(கொழும்பு)

இலங்கையில் சுதந்திரத்திற்குப் பின்னர் பெரும்பாலான கிராம அபிவிருத்தித் திட்டங்கள் தனது பதவிக் காலத்தின் போதே பூர்த்தி செய்யப்பட்டதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள் ளார்.

சரியான தொலைநோக்குக் காரணமாக இந்த அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தும் வெற்றியளித்துள்ளன என்று ஜனாதிபதி சுட் டிக்காட்டினார். பேராதனையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க சிறுவர் வைத்தியசாலையை திறந்து வைத்து உரை யாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த சில ஆண்டுகளாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத் தொழிலாளர்களின் ஏற்றுமதி என்றுமில்லாதவாறு அதிகரித்துள் ளது என்றும் இந்தியா,பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் செய்து கொண்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் காரணமாக இலங்கை பல நன்மைகளைப் பெற்றுள்ளது என்றும் ஜனாதிபதி மேலும் குறிப் பிட்டார். (து-7)

## கூடைப்பந்து சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தினால் நடாத்தப்படும் வருடாந்த கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. எனவே யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் சகல விளையாட்டுக் கழகங்களையும் எதிர் வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் தத்தமது விண்ணப்பப் படிவங் களைத் தாமாகத் தயாரித்து தலைவர் காரியதரிசியின் ஒப்பத்து டன் செயலாளர், தேனுஜி பேக்கவுஸ், வேம்படி வீதி, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திற்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ற)

## தாரா டி மெல் இராஜினாமா?

(கொழும்பு)

கல்வி அமைச்சின் செயலாளர் தாரா டி மெல் அடுத்த வாரம் தனது பதவியை இராஜினாமா செய்யவுள்ளதாக அமைச்சு வட்டாரங்கள் தெரி விக்கின்றன.

தனிப்பட்ட காரணங்களுக்காகவே இவர் தனது பதவியை இராஜி னாமாச் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## சிவாஜிலிங்கம் எம்.பி நாடு திரும்பினார்

சிவாஜிலிங்கம் எம்.பி கடந்த 7ஆம் திகதி நாடு திரும்பியுள்ளார்.

கடந்த மாதம் கடும் சுகவீனமுற்ற நிலையில் கொழும்பு வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சிவாஜிலிங்கம் எம்.பி மேலதிக சிகிச்சைக்காக கொழும்பிலிருந்து சென்ற வாரம் இந்தியா சென் றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

அன்பு வாசகர்களே...

உங்கள் வலம்புரியின் ஆறாவது ஆண்டின் நிறைவில் பல பக்கங்களைக்கொண்ட

வரலாற்று ஆவணச் சிறப்பிதழ்

வெளிவரவுள்ளது.

கல்வி, மருத்துவம், உளவியல், சோதிடம், ஆன்மீகம், விஞ்ஞான ஆராய்ச்சிகள், வரலாறு, பொருளியல், சமூகவியல், அரசியல், கவின்கலை தொடர்பான பல்துறைசார் ஆக்கங்கள் இச்சிறப்பிதழில் இடம்பெறவுள்ளன.

துறைசார் அறிஞர்கள், எழுத்தாளர்கள், மாணவர்களிடம் இருந்து ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்.

உங்கள் ஆக்கங்களை

பிரதம ஆசிரியர்

வரலாற்று ஆவணச் சிறப்பிதழ்

வலம்புரி

பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

நிறைவு விழாச் சபை, வலம்புரி

## வவு.இல் குற்றச்செயல்கள் அதிகரிப்பு

# உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு வவு.நீதிபதி பொலிஸாருக்கு பணிப்பு

(வவுனியா)

வவுனியா பகுதிகளில் கடந்த ஒரு மாத காலமாக அதிகரித்துள்ள குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக வவுனியா பிரதேச குற்றத்தடுப்புப் பிரிவுக்குப் பொறுப்பான உதவிப் பொறுப்பதிகாரி தர்மசிறி, வவுனியா தலைமையக இன்ஸ்பெக்டர் அபேசிங்க பண்டார, குற்றததடுப்புப் பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ அதிகாரி ஜயசிங்க ஆகியோரைத் தனித் தனியே அழைத்துப் பேசிய வவுனியா மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன், குறறச் செயல்களைக் குறிப்பாக ஊர்தி கடத்தல்களைத் தடுத்து நிறுத்து வதற்கு உறுதியான நடவடிக்கைகளை எடுக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஒரு மாத காலத்தில் மாத்திரம் 11 உந்துருளிகள், 2 ஊர்திகள், 2 முச்சக்கர வண்டிகள் என்பன கடத்தப் பட்டுள்ளன. வவுனியா நகரத்தின் மையப பகுதியில் இருந்து ஒரு உந்துருளி, 2 ஊர்திகள் துணிகரமாகக் கடத்திச் செல்லப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இதுதொடர்பான முறைப்பாடுகளை யடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். ஏற்கனவே கடத்தப்பட்ட 7 உந்துருளிகளும் ஒரு முச்சக்கர வண்டியும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்குள் கொண்டு செல்லப் பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக இந்த விசாரணைகளின் மூலம் தெரிய வந்திருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இராணுவத்தின் கட்டுப்பாடற்ற பகுதிக்குள் கடத்தப்படும் ஊர்திகள் கொண்டு செல்லப்படுவதைத் தடுப்பதற்காக ஓமந்தை, உயிலங்குளம் பகுதிகளில் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதையடுத்து முருங்கன் அரிப்பு பிரதேசத்தின் ஊடான கடத்தல் நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதாக பொலிஸார் நீதிமன றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதையடுத்து பொலிஸ் உயரதிகாரிகளுக்கு இது பற்றி தெரிவித்துள்ள வவுனியா மாவட்ட நீதிபதி, இவற்றைத் தடுப்பதற்கு உரிய அதிகாரிகளின் மூலம் நடவடிக்கை எடுக்குமாறும் உத்தரவிட்டுள்ளார். (ற)

## ஆடைத் தொழிற்சாலை மீது வவு.இல் கைக்குண்டுத் தாக்குதல்

வவுனியாவில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றின் மீது நேற்று முன்தினம் இரவு கைக்குண்டுத்தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது. நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் இடம்பெற்றுள்ள இச்சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைக்குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடாபாக யாரும் இதுவரை கைது செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கும் பொலிஸார், இச்சம்பவம் குறித்து விசாரணைகளை மேறகொண்டு வருவதாகவும் குறிப பிட்டுள்ளனர். (ற)

### மலசலகூடங்கள் அமைப்பு

காா்ப் (CAARP) மற்றும் உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் பளைப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பிரதேசததில் உள்ள வண்ணான்கேணியில் 130 மலசல கூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. (து)

# ரணில் ஜனாதிபதியானால் நாட்டில் இரத்த ஆறு ஓடும்

## -தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் போரை தொடங்கினால், நாமும் போரைத் தொடங்க வேணடிய நிலை உருவாகும். இது தான் உண்மை. அதைவிடுத்து பிரதமர் மஹிந்த ஜனாதிபதியானால் யுத்தம் ஆரம்பிக்கப்படும் என்பதில் எந்தவித உண்மையும் இல்லை எனத் தெரிவித்திருக்கும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் இணைச் செயலாளர் குணதாஸ அமரசேகர, ரணில் விககிரமசிங்க ஜனாதிபதியானால் நாடுபிரிவடையும். அதன் மூலம் இரத்த ஆறு ஓடும எனவும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு தேசிய நூலக ஆவண மாக்கல் சபையில் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற தேசிய அமைப்புக்களின் ஒனறியம் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவி ஏற்றால் வடக்கு-கிழக்கில் விடுதலைப்புலிகளுக்கு நிர்வாக சபை வழங்கப்பட்டு அதன் மூலம் தனித்தமிழீழமும் வழங்கப்படும்.

அதன் பின்னர் தென்பகுதி, மத்திய பகுதி என நாடு பல்வேறாகப் பிரிக்கப் பட்டு மக்களிடையே குரோதங்கள் வளர்க் கப்படும்.

இந்த நிலை தோன்றினால் சமாதானம வருமா? மோதல்கள் தான் அதிகரிக்கும். நாட்டில் இரத்த ஆறு ஓடும் எனவும் அவா எச்சரித்துள்ளார். (ற)

# குஷ்னகன் நாளை யாழ்.வருகை?

(திருகோணமலை)

திருகோணமலையில் ஜனாதிபதித் தோதல் தொடர்பான பணிகளை ஐரோப்பிய ஒன்றிய கண காணிப்பாளர் ஜோன் குஷ்னகன் நேற்று முன் தினம் பார்வையிட்டுள்ளார்.



திருமலை தேர்தல் அலுவலகர்களுடனும் இரு பிரதான கட்சிகளின் வேட்பாளர்களது பிரதிநிதிகளுடனும் அவர் ஆலோசனை நடத்தியுள்ளார்.

அதன் பின்னர் ஊடகவியலாளர்களை குஷ்னகன் சந்தித்தார்.

உதவி அரச அதிபர் ஜி.அமரதுங்க, துணைத்தேர்தல் ஆணையர் பண்டார மாப்ப, சுதந்திரக்கட்சியின் திருமலை ஒருங்கிணைப்பாளர் நிமல்காமினி, ஐக்கிய தேசியக்கட்சின் அமைப்பாளர் ஆரியவதி கலப்பதி ஆகியோரை தாம் சந்தித்ததாக குஷ்னகன் கூறினார்.

மேலும், நான்கு ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பாளர்கள் விரைவில திருமலைக்கு வருவார்கள் என்றும் எதிர் வரும் வெள்ளிக்கிழமை யாழில் தேர்தல் ஏற்பாடுகளை தாம் பார்வையிடவுள்ளதாகவும் குஷ்னகன் கூறினார். (ற)

# 'மஹிந்தவின் சிந்தனைகள்' பட்ஜெட்டில் புறக்கணிப்பு

## -பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் நேற்று முன்தினம நாடாளுமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்தில் 'மஹிந்தவின் சிந்தனைகள்' முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் நாடாளுமன்ற உறுபபினர் பந்துல குணவர்த்தன இவ்வாறு தொிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிககையில்,

'மஹிந்தவின் சிந்தனைகள' வரவு-செலவுத் திடடத்தின் மூலம் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளமையின் மூலம் அவரின் தேர்தல் கொள்கைப் பிரகடனம் ஒரு பொயயான பிரகடனம் எனவும் அதில் நிறை வேற்ற முடியாத யோசனைகள் முன் வைக்கப்பட்டுள்ளன எனவும் இதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றார். (ற)

# தேர்தலை குழப்ப முனையும் சக்திகளுக்கு உரிய பாடம் புகட்டப்படும் - அமைச்சர் மங்கள

(கொழும்பு)

எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை எவராவது குழப்ப முயன்றால் சட்டப்படி உரிய பாடம புகட்டுவோம் என நேற்று முன்தினம் மாலை இலங்கை மன்றக் கல்லூரியில் நடத்தப் பட்ட ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அவ் ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் மங்கள சமரவீர மேலும் தெரிவிக் கையில்,

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறப்போவது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே. அத்துடன் நாடாளுமன்றத்திலும் எமக்கே பெரும்பான்மையுள்ளது. ஆகையால் ஐக்கிய தேசியக் கட்சி தனியான இன்னுமொரு வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பிக்க சந்தர்ப்பம் கிட்டாது.

நாம் 18ஆம் திகதிக்குப் பின் தனியான வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பிப்போம என ஐ.தே.க. பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறுவது அர்த்தமற்றது. நீதி நியாயமான தேர்தலை நடத்த நாம் தேர்தல் ஆணையாளருக்கு முழுமையான ஒத் துழைப்பை வழங்கி வருகிறோம்.

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி தேர் தலை குழப்ப பல திட்டங்களைத் தீட்டி வருவதாக எமக்குப் பல்வேறு தகவல்கள் கிடைத்துள்ளன. இது குறித்து நாம் தேர்தல் ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளோம.

எதிர்க்கட்சித் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரசிங்க, மஹிந்தவை பகிரங்க விவாதத்திற்கு அழைத்திருந்தார்.

அந்த அழைப்பை ஏற்றுக்கொண்ட மஹிந்த அது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவருக்கு கடிதம் ஒன்றையும் அனுப் பியுள்ளார். அந்தக் கடிதத்திற்கு எதிர்க் கட்சித் தலைவரிடமிருந்து இன்னும் பதில கிட்டவில்லை என்றும் குறிப்பிட்டார். (ற)

# மங்களவின் குற்றச்சாட்டுக்களை இ.ஊ. ஆணைக்குழு நிராகரிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிமசிங்க மீதான தமது முறைப் பாடு தொ்டர்பாக தமமிடம் கருத்துக் கேட் காமல் முடிவு அறிவித்த இலஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழு மீது விசாரணை நடத்த வேண்டும் என்று அமைச்சர் மங் கள சமரவீர கோரிக்கை விடுத்துள்ளார்.

இது விடயம் தொடா்பில் மங்கள சமரவீர மேலும் தெரிவிக்கையில்,

ரணில் மீதான கணனிக் கொள்வனவு தொடர்பான மோசடி தொடர்பாக முறைப் பாடு செய்த எம்மிடம் எதுவித கருத்தை யும் ஆணைக்குழு பதிவுசெய்யவில்லை. எமது முறைப்பாடு நிராகரிக்கப்பட்டது தொடர்பாக எதுவித உத்தியோகபூர்வ தகவலும் எமக்குக்கிடைக்கவில்லை. இந்த மோசடி தொடர்பான அனைத்து ஆவணங் களும் எம்மிடம் உள்ளன.

முறைப்பாடு செய்தவரின் கருத்தறியாமல் ஆணைக்குழு முடிவு மேற்கொள்வது என்பது முதல் முறையாக இப்போது தான் நடைபெற்றுள்ளது இது விடயத் தில் ஆணைக்குழு மீது விசாரணை நடதத வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், மங்கள சமரவீரவின் குற்றச் சாட்டை ஆணைக்குழுவின் தலைவா் நீதிபதி அமீர் இஸ்மாயில் நிராகரித்துள்ளார்.

அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு உத்தியோகபூர்வமாக தகவல் அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

அது அவருக்கு கிடைக்காது போனமைக்கு தபால் துறையின் தாமதமாக இருக்க லாம்.

மங்கள சமரவீரவின் கருத்துக்களை நாம் நாளாந்தம் பதிவு செய்தோம். எம்மிடம் வரும் முறைப்பாடுகள் தொடர்பாக நாளாந்தம் நாம விசாரணை மேற்கொள்கிறோம. அதன் பின் தகுதியானவை மீது விசாரணை மேற்கொள்ளப்படும். தகுதியற்றவை நிராகரிக்கப்படும் என்று இஸ்மாயில் குறிப்பிட்டுள்ளார். (ற)

## திருமலையின் தற்போதைய சூழலால்

# பாதுகாப்பு வழங்கக் கோருகிறது வடக்கு-கிழக்கு சிங்கள அமைப்பு

(திருகோணமலை)

திருகோணமலையில் தற்போது நிலவும் சூழ்நிலையில் தமது உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் தமது உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டும் எனவும் வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பு திருமலை மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமது உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு அசசுறுத்தல் ஏற்பட்டுள்ளதனால் தமக்கு ஆயுதங்களை வழங்குமாறும் அந்த அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த மாதம் 27ஆம் திகதி இந்த அமைப்பின் உறுப்பினர் ஒருவர் அடையாளம் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக் கது. (ற)

# ஒரே பெயரில் பலரும் எழுதலாம் உகந்ததை ஏற்பதே உயரிய பண்பு

தமிழ்ப் பொதுமறையாகிய திருக்குறள் பாடிய திருவள்ளுவரின் சகோதரி எனக் கருதப்படும் சங்ககால ஔவையார் எனபவர் ஒரு புலவர். அதியமானிடம் இரு நெல்லிக் கனிபெற்றவரும், "சிவத்தைப் பேணிற்றவத்திற்கழகு" "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'' "ஆலயந் தொழுவது சாலவும் நன்று'' "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை'' "தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை'' ''நோன்பென்பதுவே கொன்று தின்னாமை'' "மோனமென்பது ஞானவரம்பு'' "வையந் தோறும் தெய்வந்தொழு'' ''திருமாலுக் கடிமை செய்'' என்றும் ஆத்திசூடி அமா்ந்த தேவனை ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே'' என்றும் பாடியவரும் ஔவையாரெனப் படுகின்றார்.

"பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை, நாலும் கலந்துனக்கு நான்தருவேன், கோலஞ் செய் துங்கக் கரிமுகத்து தூமணியே நீயெனக்குச் சங்கத் தமிழ் மூன்றும்தா" என்று தொடங்கி நல்வழிபாடிய ஔவையார், "நீறில்லாத நெற்றிபாழ், நெய்யில்லா வுண்டிபாழ்'' என்றும் 'ஒன்றை நினைக்கினது வொழிந் திட்டொன்றாகும். அன்றி அது வரினும் வந்தெய்தும்-ஒன்றை நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும் எனையாளும் ஈசன் செயல்' என்றும் பாடியதோடு ''சிவாய நமவென்று சிந்தித்திருப்போக்கு அபாயமொருநாளுமில்லை' என்றும் ''தேவர் குறளும் திருநான் மறைமுடிவும், மூவர் தமிழும் முனிமொழியும்-கோவை திருவாசகமும், திருமூலர் சொல்லும் ஒரு வாசகம் என்றுணர்'' என்று பாடியவரும். "வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம், மாமலரால் நோக்குண்டாம், மேனிநுடங்காது. பூக்கொண்டு துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம் தப்பாமற் சார்வார் தமக்கு" எனத் தொடங்கும் மூதுரை பாடியவரும் ஔவையாரே! ''சீதக்களபச் செந்தாமரைப் பூம் பாதச் சிலம்பு பல விசை பாட'' எனத் தொடங்கும் விநாயகரகவலைப்பாடியவரும் ஔவையாராம். 'வரம்புயர நீருயரும்' என்று தொடக்கியவரும், 'கோயிலில்லாவூரிற் குடியிருக்க வேண்டாம்' என்றவரும் ஔவையாரேயாம்.

'மூவர்கோவையும், மூவிளங் கோவையும், பாடியவென்றன் பனுவல் வாயால் எம்மையும் பாடுக வென்றனிர்! -நும்மையில் கெங்ஙனும் பாடுகென்யானே! வெங்கட் களிறு படுசெங்களங் கண்ணிற் காணீர், வெளிறுபடு நல் யாழ் விரும்பிக் கேளீர், புலவர் வாய்ச் சொற்புலம்பலுக்கிரங்கீர், அவிச்சுவையல்லது தமிழ்ச் சுவை தேரீர், உடஇருண்ணீர், கொடி இர் கொள்ளீர்,

ஒவ்வாக் காளத்துயர் மரம் பழுந்த, துவ்வாக களியென தோன்றிய நீரே' என்று புலவரைப் பாடேனென்றுரைத்தவரும் ஔவையாரே!

1. 'மதியாதார் முற்றம் மிதித் தொருகாற் சென்று மிதியாமை கோடியுறும்'

2. 'உண்ணீருண்ணீரென்றே உபசரியார் தம் மனையில் உண்ணாமை கோடியுறும்'

3. 'கோடி கொடுத்துங் குடிப் பிறந்தோர் தம்மோடு கூடுவதே கோடியுறும்'

4. 'கோடானுகோடி கொடுப்பினுந் தன்னுடைநாக் கோடாமை கோடியுறும்' -என்று நாலுகோடி கவி பாடியவரும் ஔவையாரே!

முருகனிடம் சுட்டபழம் (நாவற் பழம்) பெற்றவரும் 'இனியது கேட்கின் தனி நெடுவேலாய், இனிது இனிது ஏகாந்தம் இனிது எனத் தொடங்கும் பாடலைப் பாடியவரும், பழம் நீயப்பா! ஞானப் பழம் நீயப்பா!' என்றவரும் ஔவையாரெனப்படுகின்றார்.

இப்படியாக ஆத்திசூடி, கென்றை வேந்தன், மூதுரை, நல்வழி, விநாயகரகவல் மற்றும் பல தனிப் பாடலகளையெல்லாம் பாடியவர்களையெல்லாம் எந்த எந்த ஔவையார் எதைப்பாடினார், எக்காலத்தைச் சேர்ந்தவர்கள் என்று சிந்திக்காமல், எல்லா ஔவையார்களையும் ஒருவரென்றெண்ணிடும் மக்களையே இன்று நாம் காண்கின்றோம்.

## விநாயகர் வழிபாடு

பிள்ளையாரெனப்படும் விநாயகர் வழிபாடு என்ன வென்றறியாத சங்ககாலத்து ஔவையாரையும் இடைக்காலத்து ஔவையாரையும், சுந்தரமூர்த்தி நாயனார், சேரமான் பெருமாள்நாயனார் காலத்து ஔவையாரையும் கம்பர் காலத்து ஔவையாரையும் ஒருவரெனக் கொள்வது சரியானதா? விநாயகர் பூசை செய்து கொண்டிருந்த ஔவையாரை சுந்தரமூர்த்தி நாயனாரும், சேரமான் பெருமாள் நாயனாரும் சேர்ந்து குதிரை மீதேறிக் கைலாயம் புறப்பட்டவேளை, பூசையை விரைவாக முடித்து விட்டு, விரைவாகத் தம்முடன் வருமாறு அழைத்ததாகவும், அதற்கு ஔவையார், 'உங்களுக்காக நான் எனது பூசையை வேகப்படுத்த மாட்டேன்; விநாயகர் பூசையே எனக்குக் கைலாயம்' என்று கூறியதாகவும், பூசை முடிவில் விநாயகர் பிரசன்னமாகி, அவரை அப்படியே தனது துதிக்கையால் தூக்கி ஒரே வீச்சில் கைலாயத்தில் சோத்து விட்டதாகவும், அதன் பின்னரே சுந்தரமூர்த்திநாயனாரும், சேரமான் பெருமாள் நாயனாரும் கைலை சேர்ந்ததாகவும், ஔவையார் பற்றிய ஒரு கதையுண்டு.

இதனையே அருணகிரிநாதர் தம் பழனித் திருப்புகழில், "நாத விந்து கலாதி நமோ நம... எனத் தொடங்கி ''ஆதரம்பயிலாரூரர் தோழமை சேர்தல் கொண்டவரோடேமுனாளினில், ஆடல்வெம்பரி மீதேறி மாகையிலையில், ஆதியந்த விலாவாசுபாடிய சேரர் கொங்கு வைகாவூர் நனாடதில் ஆவினன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே' என்றுபாடி முடிக்கின்றார் அப்பர், சம்பந்தருக்கு பிற்பட்டவரே சுந்தரர். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தருக்கு தாள மீந்தவர்' என்று சுந்தரர் குறிப்பிடுவதும் நோக்கத் தக்கது. சுந்தரர் காலம் ஒன்பதாம் நூற்றாண்டென்பர்.

## கொங்கணர்

'பண்டுமுளைப்பதரிசியேயானாலும், விண்டுமிபோனால் விளையாதென்று, கண்டு கொண்டு முன்னே ஔவை சொன்னாளதுவுண்டோ வில்லையோ வாலைப் பெண்ணே' என்றும், 'காரியனாகிலும் வீரியம் பேசவும் காணாதென்று ஔவை சொன்னாளே, பாரினில் வம்புகள் செய்யாதே புளிப்பழம் போலுதிர்ந்து விழுந்தானே' என்றும் வாலைக்கும்மிபாடிய கொங்கெணர் என்ற ஒரு சித்தர் சொல்லுகின்றார். இவரைத் திருமழிசை ஆழ்வார் காலத்தவரென்றுரைப்பர். 7ஆம் நூற்றாண்டெனலாம். வள்ளுவர் வாசுகி கதையிலும் ஒரு கொங்கண முனிவர் பிச்சை கேட்டுவந்ததாகவும், சொல்லப்படுகின்றது. இவர்கள் ஒருவரா?

## இடைக்காடரும் திருவள்ளுவரும்

சங்ககாலத்தில், அகநானூறு புறநானூறு, குறுந்தொகை, திருவள்ளுவமாலை போன்ற நூல்களில் பாடல்கள் சிலவற்றைப் பாடியுள்ள இடைக்காடர் என்ற புலவரையும் "எல்லா உலகமும், எல்லா உயிர்களும், எல்லாப் பொருள் களும் எண்ணரிய வல்லாளன். ஆதிபரமசிவனது சொல்லாலாகுமே கோனாரே'' என்றிவ்வாறாகப் பல பாடல்களைப் பாடிய சித்தராகிய இடைக்காடரையும் ஒருவரெனக் கொள்வாருமுண்டு. தமிழ்ப் பொது மறையாம் திருக்குறளைப் பாடிய திருவள்ளுவரையும் 'அண்ட பிண்டம் நிறைந்து நின்ற அயன் மால் போற்றி' என்று தொடங்கும் திருவள்ளுவர் ஞானம் என்ற ஞானப் பாடல்களைப் பாடிய திருவள்ளுவரையும் அவ்வாறே ஒருவரென மயங்கும் மக்களும் உளரே! வடமொழியில் இராமாயணம் பாடிய வால்மீகியையும், ''இருள் வெளியாய் நின்ற சிவபாதம் போற்றி, எழுத்ததனின் விபரத்தை விரித்துச் சொல்வேன்" என்று தமிழில் ஞானப் பாடல்களைப் பாடிய சித்தர் வால்மீகரையும் ஒருவரெனக் கொள்வாருமுண்டு.

## அகத்தியர்

மிகப் பழங்காலத்தில் வட நாட்டவர் தென்னாட்டிற் புகுவதற்கு பேரரண் போல் விளங்கிய விந்திய மலையும் அடர்ந்து செறிந்து விளங்கிய அடவிகளும் தடையாயிருந்தன. அகத்திய முனிவர் என்வர், வடக்கிலிருந்து விந்திய மலையைக் கடந்து வழிகண்டு பிடித்துத் தென்னாட்டிற்குப் பதி னெண் குடி அரசர்களும், வேளிரும் சூழ வந்தாரென்றும், அக் காலத்தில் தென்னாட்டை ஆண்டிருந்த இராவணனோடு இசைவாதில் வென்று, நாட்டைத் தம தாக்கி, காடுகளை அழித்து, குடியிருக்கக்கூடிய நாடாக்கித் தம்முடன் வந்தவர்களைக் குடியேற்றி, வாழச் செய்தாரென்றும் பொதியில் மலையைத் தமக்கு இருப்பிடமாக்கிக் கொண்டாரென்றும் கூறுவர்.

'நடுவு நில்லாதிவ் வுலகஞ் சரிந்து, கெடுகின்ற தெம்பெருமானென்ன ஈசன், நடுவுள அங்கி அகத்திய நீபோய் முடுகிய வையத்து முன்னிரென்றானே!' என்றும், 'அங்கி உதயம் வளர்க்கும் அகத்தியன், அங்கி உதயஞ்செய் மேல் பாலவனொடு, மங்கி உதயஞ் செய் வடபால் தவமுனி, எங்கும் வளங்கொள் இலங் கொளிதானே' என்று திருமூலர் திருமந்திரத்தில் உரைப்பதும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய தொன்றாகும்.

'ஆதி சிவன் பெற்றுவிட்டான் என்னை ஆரியமைந்தன் அகத்தியன் என்றோர், வேதியன் கண்டு மகிழ்ந்தே- நிறைமேவும் இலக்கணஞ்செய்து கொடுத்தான்' என்று சுப்பிரமணிய பாரதியார் தமிழ்த் தாய் கூற்றாகப் பாடுவதும் இங்கு நோக்கத்தக்கது.

'சத்தியே பராபரமே ஒன்றே தெய்வம்' என்றும், 'மனமது செம்மையானால் மந்திரஞ் செபிக்க வேண்டா, மனமது செம்மையானால் வாயுவையுயர்த்த வேண்டா, மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டாம், மனமது செம்மையானால் மந்திரஞ் செம்மையாமே' என்றும் ஞானப் பாடல்களைப்பாடிய அகத்தியரையும், வேத, புராண காலங்களிலும், பழந்தமிழ்ச் சங்க காலத்திலும், மத்திய காலத்திலும் முனிவர்களாகவும், புலவர்களாகவும் மருத்துவர்களாகவும், சோதிடர்களாகவும் விளங்கிய அகத்தியர்களையும் ஒருவர் எனக் கொள்பவர்களும் உண்டு.

கற்றவர்கள் முதல் கல்வியறிவற்றவர்கள் வரை எல்லோரும் உற்றுணர்ந்து கொள்ளாமல், எல்லாம் ஒருவரையே குறிப்பாக எண்ணும் நிலையை மாற்ற வேண்டும் என்பதற்காகவே இவைகளையெல்லாம் இங்கு குறிப்பிடப்படுகின்றன. □

**மதிவாணர் செ.மதுசூதனன்**

# ஐ.தே.க உரிய விளக்கமளிக்காவிடின்
# ரணிலுக்கான எமது ஆதரவு முடிவை மறுபரிசீலனை செய்யவேண்டி வரும்
## -ம.ம.மு.தலைவர் பெ.சந்திரசேகரன்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் உரிமைக்கான போராட்டத்தை முறியடிக்க உள்நாட்டு கூலிப்படைகளையும் வெளிநாட்டுப்படைகளையும் பயன்படுத்த எதிர்கால திட்டமெதுவும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இருக்குமானால் அதற்கு மலையக மக்கள் முன்னணி ஒரு போதும் துணை போகாது என்பதோடு அதற்கு எதிராகவும் நாம் செயற்படுவோம் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் அவா் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

நுவரெலியா ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர் ஒருவர் பேசிய கருத்து ஊடகங்களில் வெளிவந்துள்ளது. இது உரிமைக்காகப் போராடும் ஒரு இனத்திற்கு எதிராக விடப்படும் பாரதூரமான எச்சரிக்கையாகவே மலையக மக்கள் முன்னணி கருதுகின்றது.

இதற்குச் சரியான விளக்கத்தை ஐக்கிய தேசியக்கட்சி வெளிப்படுத்தாமல் இருந்தால் நாம் ஜனாதிபதி தேர்தலில் ஆதரவு வழங்க எடுத்த முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டி வரும்.

இதைப்போன்று ஐக்கிய தேசியக்கட்சியை ஆதரிக்கும் மலையகத்தமிழ்க் கட்சிகள் அனைத்திற்கும் சமமான முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரம சிங்கவிடம் நாங்கள் வலியுறுத்தி இருந்தோம்.

ஆனால், மலையகத்தில் தமிழ் மக்கள் வாழுகின்ற பகுதிகளில் நடைபெறுகின்ற கூட்டங்களில் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சிக்கே ஐக்கிய தேசியக்கட்சி முக்கியத்துவம் வழங்கிவருகின்றது. மலையக மக்கள் முன்னணியை ஓரங்கட்டும் ஒரு முயற்சியின் வெளிப்பாடாகவே இதனை நாம் கருத வேண்டியுள்ளது.

இவ்விரண்டு விவகாரங்களுக்கும் நம்பத்தகுந்த உத்தரவாதம்



வழங்கப்படாவிட்டால் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிப்பது மலையக மக்கள் முன்னணிக்கும், ஒட்டுமொத்தமாக தமிழர்களுக்கும் மிகப்பெரும் ஆபத்தாகவே முடியும் எனவும் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற)

# அமெரிக்க விசா கோரியவர் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

இலங்கையில் தனக்கு போதிய பாதுகாப்பு இல்லாததால் அமெரிக்காவிற்குச் செல்வதற்கு விசா வழங்குமாறு கோரிய நபரை அமெரிக்க தூதரகத்தைச் சேர்ந்தவர்கள் கொள்ளுப்பிட்டி பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

இதனிடையே கொள்ளுபிட்டி 13ஆவது ஒழுங்கையில் கடந்த 7ஆம் திகதி தற்கொலையங்கி யொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த அங்கிக்கும் விசா கேட்டுவந்த இந்த நபருக்கும் இடையில் ஏதேனும் தொடர்புகள் உள்ளனவா என்பது குறித்து கொள்ளுப்பிட்டிப் பொலிஸா் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (அ)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சித்தமருத்துவ டாக்டர் வெற்றிவேல் சக்திவேல் எழுதிய "உளவியற் சிந்தனைகள்' நூல் வெளியீட்டுவிழா எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் பாடசாலை வீதியிலுள்ள மூலிகை சுகவாழ்வு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சைவ பரிபாலன சபைத்தலைவா் கலாநிதி சைவப்புலவா் வ.கந்தசாமி இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நூலை வெளியிட்டுவைப்பார். (ற)

## தம்பி அடித்ததில் அக்காவுக்குக் காயம்

(சாவகச்சேரி)

அக்காவுக்கு தம்பி தலையில் அடித்ததில் அக்கா தலையில் காயமடைந்தார். இச்சம்பவம் சாவகச்சேரி கச்சாய் வீதியில் அண்மையில் நடந்தது.

அக்காவுக்கும் தம்பிக்கும் இடையில் ஏற்பட்ட தகராறில் கோபங் கொண்ட தம்பி தனது சம்பாத்தினால் அக்காவின் தலையில் அடித்ததனால் அக்காவான செ.அஜித்தா (வயது 11) என்பவர் காயமடைந்தார்.

இவர் காயத்துக்காகச் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார். (து-108)

# ஜனாதிபதித் தேர்தலை நிராகரிக்க வாக்குகளை செல்லுபடியற்றதாக்குக!

## புதிய – ஜனநாயகக் கட்சி அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலை நிராகரிக்க வாக்கு களைச் செல்லுபடியற்றதாக்க வேண்டுமென புதிய - ஜனநாயக கட்சி அறைகூவல் விடுத் துள்ளது.

இது தொடர்பில் கட்சி விடுத்துள்ள அறிக் கையில்,

27 வருடகால நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையின் கீழ் அதி காரக் கதிரையில் இருந்து வந்த இரண்டு பிரதான கட்சிகளின் ஜனாதிபதிகளால் இந்த நாடும் அனைத்து மக்களும் எவற் றைப் பெற்றுக்கொண்டனர்?

நாட்டின் தேசிய இனப்பிரச்சினை பேரின வாத ஒடுக்குமுறை யுத்தமாக மாற்றப் பட்டு வடக்கு கிழக்கு மக்கள் மீது திணிக் கப்பட்டது. கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் ஏறத்தாழ ஒரு இலட்சம் மக்கள், கொன் றழிக்கப்பட்டனர். இருப்பிடங்களும் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதி யான சொத்துக்களும் வாழ்வாதாரங்க ளும் அழிக்கப்பட்டு பல இலட்சம் பேர் அகதிகளாக்கப்பட்டனர். இவை அனைத் தையும ஜனாதிபதி ஆட்சி முறையே வழி வகுத்து முன்னெடுத்து வந்துள்ளது.

பேச்சுவார்த்தை மூலமாகத் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது தாகக் கூறிக்கொண்டு காலம் கடத்தப் பட்டு வந்ததே தவிர, சுயநிர்ணய உரிமை அடிப்படையில் வடக்கு கிழக்கிற்கான சுயாட்சி அதிகாரப் பகிர்விற்கு ஜனாதிபதி ஆட்சிக் கதிரையில் அமர்ந்த எவருமே முன வரவில்லை.

நாட்டின் மூல வளங்களைப் பயன்படுத்தி பல்துறை அபிவிருத்தியை முன்னெடுக் கக்கூடிய தேசிய பொருளாதாரத் திட்டங் கள் முன்னெடுக்கப்படவில்லை. அதே வேளை, உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வர்த்தக அமையம் போன்றவற றின் ஆலோசனை வழிகாட்டலில் தாராள மயம், தனியார்மயம் என்பன உலகமய மாதல் என்ற ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிர லாக ஜனாதிபதி ஆட்சி முறையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டு யுத்தத்தின் மறை விலே மறுகாலனித்துவமாக முன்னெடுக் கப்பட்டு வருகின்றது.

தாராளமயத்தின் மூலம் விவசாயமும் கைத்தொழில்களும் நாசமாக்கப்பட்டன. உள்ளூர் உற்பத்தியாளர்கள் வீதிககு விரட்டப்பட்டனர். அரசாங்க பொது கூட் டுத்தாபன நிறவனங்கள் பல்தேசிய கம்பனிகளுக்கு தாரைவார்க்கப்பட்டன. எஞ்சி யுள்ளவைகளையும் தனியார்மயப்படுத்து வதற்கு நடவடிக்கைகள் தொடர்கின்றன. அழிவுதரும் திட்டங்களான மலையக மேல் கொத்மலைத்திட்டம், புத்தளம் நுரைச் சோலை அனல் மின்திட்டம் என்பனவும் முன்னெடுக்கப்படவுள்ளன. வடக்கிற்கு பெரும அழிவுகளை ஏற்படுத்தக்கூடிய சேது சமுத் திரக் கால்வாய்த்திட்டம் பற்றி எதிர்ப்போ கண்டனமோ தெரிவிக்காது ஆளும் தரப் பில் மௌனம் காக்கப்படுகிறது. இவை அனைத்திற்கும் ஜனாதிபதி ஆட்சிமுறை மையே தலைமைதாங்கி நிற்கின்றது.

அன்றாட அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வுகள், சேவை - போக்குவரத் துக் கட்டண உயர்வுகள் போன்றவற்றால நாளாந்த வாழ்க்கைச் செலவுகள் வானத்தை நோக்கி விரைந்த வண்ணம் உள்ளன. அதனால் தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், அரசாங்க, தனியார்துறை ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் உழைக்கும் மக்கள் அனைவரும் பாரிய பொருளாதாரச் சுமைகள், நெருக்கடிக ளால் அழுத்தப்பட்டு வருகின்றனர். இவற் றுக்கு ஜனாதிபதி ஆட்சி முறையால் தீர்வு எதனையும் காணமுடியவில்லை.

யுத்தத்தாலும் சுனாமிப் பேழிவினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரியவாறு புனர் வாழ்வு புனரமைப்பு வழங்கப்படவில்லை. சுனாமிப் பொதுக்கட்டமைப்பு கூட மனித நேயமற்ற வகையில் தடுக்கப்பட்டு - கை விடப்பட்ட நிலையிலேயே இருந்து வருகி றது. பாதிக்கப்பட்ட பல இலட்சம் பேருக்கு ஜனாதிபதி அட்சி அதிகாரத்தால பதில் கூறமுடியவில்லை.

நாட்டில் உணவு, உடை, இருப்பிடம் இன்மை மற்றும் வேலையின்மை என்பன வளர்ந்து வறுமைக்கோட்டின் கீழ் மக்கள் தள்ளப்பட்டு வருகின்றனர். கல்வி, சுகாதா ரம் சிதைக்கப்பட்டு வரும் அதேவேளை, சமூக பண்பாட்டுத்துறைகள் சீரழிக்கப்பட்டு கொலைகள், திருட்டுக்கள், கொள்ளைகள். பாலியல்வல்லுறவுகள், போதைப் பொருள் பாவனை, சிறுவர் - பெண்கள் துஷ்பிரயோகம் என்பன தலைவிரித்தாடி வருகின்றன. இவற்றுக்கு ஜனாதிபதி ஆட்சிமுறை எத்தகைய பரிகாரங்களை யும் தேடவில்லை.

கடந்த ஜனாதிபதி ஆட்சிக்காலம் முழு வதும் ஜனநாயக தொழிற்சங்க மனித உரிமைகள் மீறப்பட்டே வந்துள்ளன. தடுத்து வைத்தல், சித்திரவதை, சிறை, காணாமல் போதல் போன்றவற்றால் பல் லாயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிக கப்பட்டு - அவற்றின் பாரிய இழப்புகள் தாக்கங்களில் இருந்து விடுபடாத அவல வாழ்விற்குள்ளேயே இருந்துவருகினறன. இவை அனைத்தும் இவ் ஜனாதிபதி ஆட்சி முறையின் கீழேயே தொடர்ச்சியாக இடம் பெற்று வந்துள்ளன.

அமெரிக்க ஏகாதிபத்தியம், மேற்குலக சக்திகள், ஜப்பான் ஒருபுறமாகவும் இந்திய பிராந்திய மேலாதிக்கம் மறுபுறமாகவும் இலங்கையின் பொருளாதார - அரசியல் இராணுவ சமூக பண்பாட்டுத்துறைகள் அனைத்திலும் ஊடுருவி பெரும் ஆதிக் கப்போட்டியில் ஈடுபட்டும் வருகின்றன. இதனால் இலங்கையின் இறைமை சுதந் திரம் பறிபோகிறது. இதற்கு ஜனாதிபதி ஆட்சிமுறை மறுப்பின்றி இரு புறத்திற் கும் வழிவிட்டே வந்திருக்கின்றன.

இவ்வாறு நாட்டிற்கும், உழைக்கும் அனைத்து மக்களுக்கும் தமிழ்த்தேசிய இனம் உட்பட முஸ்லிம் மலையகத் தமிழ்த தேசிய இனங்களுக்கும் சுமைகள் பிரச் சினைகள் நெருக்கடிகள் யுத்தக் கொடு மைகள் ஜனநாயக மனித உரிமை மறுப் புக்கள் மற்றும் சமூக அநீதிகள் விளை வித்து வந்தது இவ் ஜனாதிபதி ஆட்சி முறைமையேயாகும்.

அதேவேளை, சொத்து சுகம் படைத்த மேட்டுக்குடி உயர் வர்க்க சக்திகளுக்கும, அந்நிய ஏகாதிபத்திய வாதிகளுக்கும், அவர்களது பல்தேசியக் கம்பனிகளுக் கும சேவை செய்வதில் முதலாளித்துவ பேரினவாத ஆளும் வர்க்கப் பிரதிநிதியா கவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிக் கதிரையில் ஐக்கிய தேசியக் கட்சியினதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யினதும் ஜனாதிபதிகள் தொடர்ந்து அதி காரம செலுத்தி வந்துள்ளனர். அதனால் சாதாரண உழைக்கும் மக்கள் எவ்வித விமோசனங்களையும் பெறவில்லை.

எனவே, இத்தகைய ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தோ தலை அனைத்து மக்களும் நிராகரிக்க வேண்டும் என்ற அறை கூவலை எமது புதிய - ஜனநாயகக் கட்சி விடுக்கின்றது. மக்கள் தமது எதிர்ப்பை வெளிக்காட்டும் வண்ணம் வாக்குச் சீட்டை செல்லுபடி யற்றதாக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறது எனக் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. (ற)

## விபத்தில் படுகாயம்

முகமாலை சோதனைச் சாவடியில் சாமான்களை ஏற்றிய வேளையில் அரு கில் வந்த மற்றொரு லொறியின் சில்லு கால் பாதத்தில் ஏறியதில், தொழிலாளி ஒருவர் பாதத்தில் உள்ள எலும்புகள் முறிந்து படுகாயமடைந்தார்.

மிருசுவில் வடக்கை சேர்ந்த வல்லி புரம் ஜெயராசா (வயது-30) என்பவரே காயமடைந்தவராவார்.

இவர் உடனடியாக சாவகச்சேரி வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளார். (து-108)

## பாலஸ்தாபனம்

(பருத்தித்துறை)

தென்புலோலி சின்னத்தாய் விநாயக ராலய திருப்பணிவேலைகள் 15 இலட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதனையொட்டி எதிர்வரும் 13ஆம் திகதி இவ் ஆலய பாலஸ்தாபன கும்பாபி ஷேகம நடைபெறவுள்ளது. வல்வெட்டித் துறை சிவன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ எஸ்.மனோகரக்குருக்கள் தலைமையில் இப்பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடை பெறவுள்ளது.

இவ் ஆலய பிரதான ஆலயம், வைரவர் ஆகியன புனரமைக்கப்படுவதுடன் மடம், மடப்பள்ளி, களஞ்சிய அறை, கிணறு, ஆகியன நிர்மாணிக்கப்படுமென்றும் ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (அ-52)

## மூன்று வயதுக் குழந்தை பாம்பு கடித்து மரணம்

(பருத்தித்துறை)

அரவம் கடித்த 3 வயதுக் குழந்தை யொன்று பரிதாபகரமாக மரணமானது.

உடுப்பிட்டி நாவலடியைச் சேர்ந்த முருகையா ரூபிகா(வயது-3) என்ற குழந் தையே மரணமான குழந்தையாகும. அர வத்தினால் கடியுண்ட இக்குழந்தை உடனடியாக பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச்செல லப்பட்டு அவசர சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டபோதும் குழந்தையைக் காப்பாற்ற முடியவில்லை. (அ-52)

## அகண்ட நாம பஜனை

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவினால பிரகடனப்படுத்தப்பட்ட அகில உலக அகண்டநாம பஜனை யாழ்.பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் எதிர் வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 6.00 மணி தொடக்கம் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை பி.ப 6.00 மணி வரை நடைபெறவுள் ளது. நண்பகல் நாராயண சேவையும் இடம்பெறும். (ற)

## ஜீ.ரி.இஸட் வீடமைப்பு

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்குடபட்ட கச்சார்வெளி, புலோப் பளை மேற்கு, முல்லையடிப் பிரதேசங் களில் ஜீ.ரி.இஸட் நிறுவனத்தால் 56 வீட்டுத்திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள் ளது. ஒரு வீட்டுக்கான உத்தேச மதிப் பீடு 2 இலட்சத்து 74 ஆயிரத்து 819 ரூபா என மதிப்பிடப்பட்டு வேலைத்திட்டம் நடை பெறுகின்றது. (து)

## நெருக்கடி முகாமைத்துவம் சார் பயற்சி

அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் அனுசரணையு டன் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தி னால் கடந்த 2ஆம் திகதி கிளிநொச்சி யிலுள்ள நியாப் சுற்றுலா விடுதியில் புதிதாக நிர்வாக சேவையில் இணைத் துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகளுக்கு நெருக கடி முகாமைத்துவம் சார் பயிற்சிகளுக் கான பயிற்சிப் பட்டறை இடம்பெற்றது.

இந்த ஒருநாள் பயிற்சிப் பட்டறையை கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதி பா வேதநாயகன் ஆரம்பித்துவைத்தார். நியாப் பிரிவுத் திட்டமிடல் பணிப்பாளர் பாத்திபன், மாவட்ட செயலக உதவி அரச அதிபர் ஜெயராணி, வைத்திய கலாநிதி யூட் ஆகியோர் கருத்துரைகள் வழங் கினர். (து)

## கோரிக்கை

பளை நகர வடிகால் அமைப்புகளின புனரமைப்பு மீள் நிர்மாண வேலைகளை மேற்கொள்வதற்கு பளை பிரதேச செய லர் ச.சிவசிறி ஒக்ஸ்பாம் அமைப்பிடம் நிதி உதவி கோரியுள்ளார். (து)

# தமிழ் மக்களுக்கு எதிரான அட்டூழியங்களை அரசு அனுமதிப்பது சமாதானத்தை இல்லாதொழிக்கும்

## திருமலை தமிழ் மக்கள் பேரவை அறிக்கை

(திருகோணமலை)

ஸ்ரீலங்கா இராணுவத்தின் அத்துமீறிய அட்டூழியங்களை அரசாங்கம் மௌன மாக அனுமதித்திருப்பதானது சமாதா னத்தை மிக விரைவில் இல்லாதொழிக் கும் என திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையின் சார்பில் அதன் தலைவர் வ.விக்னேஸ்வரன் வெளியிட் டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது,

அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பித்து அதன் மூலம் படையினரைத் தாம் விரும் பியவாறு செயல்பட அரசாங்கம் அனுமதித் துள்ளது. கொழும்பில் தமிழ் மக்களுககு எதிராக நடத்தப்படும் அக்கிர மங்கள் கணக்கிலடங்காது. ஆட்களைக கடத்து தல், காணாமல் போதல் ஸ்ரீலங்கா அரச சட்டத்தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது போல் தோன்றுகின்றது.

சமாதான உடன்படிக்கை என்பது தனியே தென்னிலங்கை பெரும்பான்மை இனம் நிம்மதியாக வாழ்வதற்கு மட்டுமே உரு வாக்கப்பட்டுள்ளதா? அவசரகாலச் சட்டத் தின் கீழ் தமிழ் மக்களை 1977ஆம் ஆண்டு முதல் 25 ஆண்டுகள் ஆட்சிபுரிநத தென்னிலங்கையின் பேரினவாத அரசுகள் இரண்டும் ஒருவருக்கொருவர் சளைத்தவர் கள் அல்ல.

இன்று யுத்த நிறுத்த உடன்படிக்கை அமுலில் உள்ளபோதே வடக்கு கிழக்கில என்ன நடக்கின்றது? இராணுவம் கொண்டு வந்து குவிக்கப்பட்டு மக்களின் அன்றாட வாழ்வு முடக்கப்பட்டுள்ளது. சோதனைச் சாவடிகள் மனம்போன போக்கில் அமைக கபபட்டுள்ளன. தமிழ மக்களுக்கு எதிரான ஆயுத வன்முறைகளும் பலாத்கார நடவடிக்கைகளும் கட்டவிழ்த்துவிடப் பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் புத்தூர் பகுதியில் இரா ணுவம் தமது சக இராணுவ வீரரை காப் பாற்றுவதற்காக சட்டத்தை தனது கையில் எடுத்துள்ளது. ஓமந்தையில் இராணுவம் தனக்கு விரும்பியவாறு தனது நடவடிக் கைகளை மேற்கொள்கிறது.

புத்தூரில் அண்மையில் இராணுவம் நடத்திய துப்பாக்கி பிரயோகத்தில் 15 போ படுகாயமடைந்து ஒருவர் உயிரிழந்தும் உள்ளார். அரசும் அரச ஊடகங்களும் உண்மைக்கு மாறான செய்திகளை நாளுகசு நாள் வெளியிடுகின்றன. கிழக்கில் தமிழ ஆயுதக் குழுக்களின் பெயரால் இராணு வம் தமிழீழ விடுதலைப்புலிகள் மீது தாக்குதல் நடத்துகிறது.

இவை யாவற்றையும் செய்துகொண்டு சமாதானத்தை பற்றி அரசாங்கம் சர்வ தேசத்திற்கு பொய்யான பிரசாரங்களை செய்துவருகின்றது. அரசின் இச்செயற் பாட்டை தமிழ் மக்களாகிய நாங்கள் தொடர்ந்து பார்த்துக்கொண்டிருக்க முடி யாது. ஜனாதிபதித் தேர்தலுக்காக எங் களின் வாழ்வை நசுக்குவதனையும் பேரினவாதத்தை திருப்திப்படுத்துவத னையும் எம்மால் இனியும் சகித்துக் கொள்ள முடியாது.

பயங்கரவாதத் தடைச்சட்டம் சட்ட ரீதி யாக வலுவிழந்துள்ள நிலையில் பயங் கரவாதச் சட்டத்தின் கீழ் தமிழ் மக்கள மீது வழக்குத் தொடர்வதும் தடுப்புக் காவலில் வைத்திருப்பதும் அப்பட்டமான மனித உரிமை மீறலாகும்.

அரசாங்கமும் பேரினவாத சக்திகளும யதார்த்த நிலையைப் புரிந்துகொண்டு இனிமேலாவது இராணுவத்தின் அடாவடித தனங்களை நிறுத்துவதற்கும் அவசரகால சட்டத்தின் பெயரால் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அனைத்து அடக்குமுறைகளையும் மனித உரிமை மீறல்களையும் தடுக்கவேண்டும். இன்றேல நிச்சயமாக சாமாதான ஒப்பந்தம் உங் களாலேயே மீறப்பட்டு மீண்டும் யுத்தம வெடிக்கும் சூழ்நிலை உருவாகும் என எச்சரிக்கின்றோம்.

தொடர்ந்தும் சர்வதேச சமூகத்தை உங்களால் ஏமாற்ற முடியாது என்றும் அவ அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ற)

## மிதிவெடி அகற்ற கோரிக்கை

பளை பிரதேச செயலக பிரிவுக்கு உட் படட பகுதியைச் சோந்த கச்சார்வெளி, பெரியபளை வாய்க்கால், ஆணைவிழுந்தான் அரசர்கேணி வாய்க்கால் முதலிய பிர தேசங்களில் உள்ள மிதிவெடிகளை உட னடியாக அகற்றி நீர்ப்பாசனத்திற்கு ஆவண செய்யும் வண்ணம் பளை பிரதேச செயலர் ச.சிவசிறி மனிதநேய கண்ணிவெடி அகற் றும் பிரிவினரிடம் கோரிக்கை விடுத் துள்ளார். (து)

# “பட்ஜெட் - 2005” ஒரே பார்வையில்...

அரசாங்க ஊழியர்களுக்கு 2006ஆம் ஆண்டிலான வாழ்க்கைச் செலவுப்படி உள்ளடங்கலாக மாதம் ஒன்றுக்கு 1,300 ரூபாவைக் கொண்ட ஆகக்குறைந்த சம்பள உயர்வு கிட்டும். இதே போன்று அடுத்த ஆண்டு ஜனவரி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் ஓய்வூதியம் பெறுவோருக்கு ஆகக்குறைந்தது ரூபா 500 ஆகவும் ஆகக்கூடியது ரூபா 1250 ஆகவும் இருக்கும் வகையில் ஓய்வூதியக் கொடுப்பனவு அதிகரிக்கப்படும் எனவும் வரவு செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றிய நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கில் யுத்தம் மற்றும் சுனாமியினால் பாதிக்கப்பட்டு ஊனமுற்ற சிறார்களுக்கு 18 வயது வரை 1500 ரூபா வரையான மாதாந்தக் கொடுப்பனவை வழங்கவும், தாய்மார் மற்றும் பிள்ளைகளுக்கு ஊட்டச்சத்து நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுக்கவும் வரவுசெலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, சிகரெட் 50 சதத்தினாலும், மதுபானம் 15 ரூபாவினாலும, பியர் 1லீற்றர் 5 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. கையடக்கத் தொலைபேசி மீதான வரி நீக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். முச்சக்கர வண்டி டயர்கள் மீதான இறக்குமதித் தீர்வை 28 வீதத்திலிருந்து 15 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இசைக்கருவிகள் மீதான இறக்குமதித் தீர்வையும் 15 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளதுடன் அனைத்துவகை கடதாசி மீதான 15 வீத வரியும் நீக்கப்பட்டுள்ளதென்றும் நிதி அமைச்சர் கூறினார்.

இதேவேளை விடுமுறையினை எடுக்காத அரச ஊழியர்களுக்கு கொடுப்பனவு வழங்கவும், சலுகைத் தீர்வையில் அரச ஊழியர்கள் வாகனங்களை இறக்குமதி செய்ய புதிய திட்டம் அமுல்படுத்தவும் நடவடிக்கை எடுககபபட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் இரண்டாவது வரவு -செலவுத் திட்டத்தினை நிதியமைச்சர் நேற்றுமுன்தினம் பிற்பகல் சபையில் சமர்பபித்து உரையாற்றும் போது, அவர் மேலும் கூறியதாவது,

சுனாமி மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மோதல்களின் காரணமாக பெரும் எண்ணிக்கையான சிறுவர்கள் தமது பெற்றோரை இழந்திருக்கிறார்கள். இப்பிரதேசங்களில வசிக்கும் பெரும் எண்ணிக்கையான பிள்ளைகள் ஊனமடைந்தவர்களாயுள்ளனர். அவர்களை கவனிப்பதும் அவர்களின் வளர்ச்சிக்கு உதவுவதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும். ஆகவே அத்தகைய ஒவ்வொரு பிள்ளைக்கும வங்கிக் கணக்கொன்றை திறந்து அவர்கள் 18வயதினை அடையும் வரை ரூ.1,500கொண்ட மாதாந்த கொடுப்பனவை வழங்க நான் முன்மொழிகின்றேன்.

இக்கணக்கில் ஒன்று சேர்நத தொகை இப்பிள்ளை தொழிற் பயிற்சி நிறுவனத்திற்குள் நுழையும் போது இரு மடங்காகவும் பலகலைக்கழகத்திற்கு நுழையும போது மும்மடங்காகவும் அதிகரிக்கும். இத்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு ரூ.200 மில்லியனை ஒதுக்க நான் முன்மொழிகின்றேன். மக்கள் வங்கி அவற்றின் விரிவான கிளை அமைப்புக்களினூடாக இதனை முகாமைப்படுத்தும். “செனகச” கணக்கிற்குத் தகைமை பெறக்கூடிய பிள்ளைகளுக்கான சிறப்பு பிள்ளைகள் நல நிகழ்ச்சித்திட்டங்களை மக்கள் வங்கியின் ஒத்துழைப்புடன் வடிவமைப்பதற்கு சுகாதார மற்றும் கல்விப் பணிகளிலுள்ள தொழில் சார் நிபுணர்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன்.

### பிள்ளைகள்,ஊனமுற்றோர் மற்றும் முதியோர் இல்லங்களுக்கான சலுகைகள்

ஆண்டு தொடக்க வருமானத்திற்கு கூடுதலாக எந்தவொரு தனிப்பட்டவர்கள் அல்லது நிறுவனங்களால் வைத்திருக்கப்படும் தற்போதைய வட்டி வருமானம் 10சதவீத வரிக்கு உட்பட்டதாகும். இதன் விளைவாக முதியோர் இல்லங்கள், சிறுவர் இல்லங்கள், ஊனமுற்றோருக்கான இல்லங்கள் ஆகியவற்றின் முகாமைப்படுத்தல் போன்ற முக்கிய சமூகப் பணிகளில் தம்மை அர்ப்பணித்துள்ள அறக்கொடை நிறுவனங்களும் வரி செலுத்தவேண்டியனவாக இருக்கின்றன. அத்தகைய நிறுவனங்கள் இவ்வரியிலிருந்து விலக்களிக்கப்படவேண்டுமென நான் முன்மொழிகின்றேன்.

நாளொன்றுக்கு 50,000 லீற்றர்களை உற்பத்தி செய்கின்ற புதிய பால் பொறித்தொகுதி ஒன்று கிளிநொச்சியில் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் ஆரம்பிக்கப்படும். பாலின் உற்பத்தியாளரின் விலையினை லீற்றருக்கு ரூ.25-30 வீச்சில் அதிகரிப்பதற்கும் உள்ளூர் பால் கைத்தொழிலை ஊக்குவிக்கும் விதத்தில பால்மா மீதான தற்போதையதர்வைத் தளர்த்தல்களை படிப்படியாக அகற்றுவதற்கும் நான் முன்மொழிகினறேன்.

### அச்சு மற்றும் பொதியீட்டு கைத்தொழில

இலங்கை அச்சு மற்றும் பொதியிடல் கைத்தொழிலானது வருடாந்தம் 400,000 மெற்றிக் தொன கடதாசியை வேண்டி நிற்கின்றது. இது இறக்குமதியாளர்களினால் பூர்த்தி செய்யப்படுகின்றது. அச்சிடப்பட்ட பொருட்களின் கிரயச செலவு இறக்குமதி செய்யப்பட்ட கடதாசியின் கிரயமானது 70% மாகும். கடதாசி மற்றும் கடதாசி மட்டைகளின் மீதான அதிஉயர் தீர்வையே இவ்வுயர் கிரயத்திற்கு காரணமாகும். உள்ளூர் அச்சு மற்றும் பொதியிடல் கைத்தொழிலை ஊக்குவிப்பதற்காக தற்போது நடைமுறையிலுள்ள அனைத்து வகை கடதாசிகள் மீதுமான 15% வரியை நீக்குவதற்கு முன்மொழிகின்றேன்.

### தனியார் பேருந்து சேவை வழங்குநர்கள்

விரைவாக காலாவதியாகிக கொண்டிருக்கும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துத் தொகுதியினை மீள் கட்டியெழுப்புவதோடு உள்ளூர் தனியார் பேருந்து சேவை வழங்குநர்களுக்கு ஊக்கயளிப்பதும் அவசியமாகும். நாளாந்தம் கொழும்பு நகரத்தினுள் நுழைகின்ற பேருந்துகளில் 40%ஆனது 25வருடங்களுக்கு மேல் பழமையானதாகும் என்பதை நான் அறிவிக்கின்றேன். தனியார் பேருந்து சேவை வழங்குநர்கள் தமது பழைய பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகளை பெற்றுக் கொள்வதற்கு சலுகை அடிப்படையிலான கடன் திட்டமொன்றை அமுல் படுத்துவதற்கு முன்மொழிகின்றேன்.

கொழும்பு மற்றும் கம்பஹாவுக்கு வெளியேயுள்ள மாவட்டங்களில் பொறி கருவி மற்றும் கட்டடங்களில் 2006 ஏப்பிரலிலிருந்து 2வருடங்களினுள் ரூ.30 மில்லியனுக்கு குறையாத மூலதனத்துடன் 200 ஆட்களுக்கு குறையாத நேரடித் தொழிலை வழங்கக்கூடிய புதிய கைத்தொழிலை நிறுவும் எந்தவொரு கம்பனிக்கும் பின்வரும் ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

1.10வருட காலப்பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிப்பு.

2.முதலீடு செய்யப்பட்ட தொகை மீது வருமான வரியிலிருந்து நிவாரணம்.

3.பின் தங்கிய பிரதேசங்களில் அவ்வாறான முதலீடுகளுக்காக கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட எந்தவொரு கொடு கடன் வசதியிலிருந்தும், எந்தவொரு கடன் வழங்கும் நிறுவனத்தால் பெறபபட்ட வட்டி வருமானத்தின் விலக்களிப்பு.

4.அவ்வாறான நடவடிக்கைகளின் பாவனைக்காக இறக்குமதி செய்யப்பட்ட எந்தவொரு புதிய பொறி மற்றும் கருவி சார்பாக தீர்வை மற்றும் பெறுமதி சேர் வரி விலக்களிப்பு.

இவ் ஊக்குவிப்புகளுக்கு மேலதிகமாக கொழும்பு அல்லது கம்பஹா மாவட்டங்களில் தற்போது தொழிற்படும் எந்த விதமான மேற்கொள்கைகளும் ஏனைய மாவட்டங்களில் மீளமைக்கப்பட்டால் மீளமைக்கும் செலவை வரி நோக்கங்களுக்காக கழிப்பதை கோருவதற்கு அனுமதிக்கப்படுவர்.

(தொடரும்)

# மனிதநேயமிக்க மாமேதை பேராசிரியர் அ.துரைராஜா

வடமராட்சி இமையாணன் கிராமத்தில் 1934ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 10ஆம் நாள் அழகையா, செல்லம்மா தம்பதியின் சிரேஷ்ட புதல்வனாக பிறந்தவர் தான் பேராசிரியர் அ.துரைராஜா அவர்கள். சிறுவயதிலேயே சகல துறைகளிலும் பிரகாசித்த துரைராஜா அவர்கள கல்வியிலும் மிகச் சிறப்பாக கவனம் செலுத்தி வநதார். இவர் தனது இளமைக்

> **இன்று அமரர் பேராசிரியர்**
> **அழகையா துரைராஜாவின்**
> **72ஆவது பிறந்த தினம்**

கல்வியை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன பாடசாலையிலும், உயர் கல்வியை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் திறம்படக் கற்று 1953ஆம் ஆண்டு பலகலைக்கழகத்திற்கான தெரிவுப் பரீட்சையல் அதிகூடிய புள்ளிகளைப பெற்று இலங்கைப் பல்கலைக்கழகத்தின் குடிசார் எந்திரவியல் பீடத்திற்குத் தெரிவாகி தனது திறமையைக் காட்டினார்.

பட்டப்படிப்பை மேற்கொண்டு முதலாம தர சிறப்புப் பட்டம் பெற்று அப்பல்கலைக் கழகத்தின் குடிசார் எந்திரவியல் துறையின் போதனாசிரியராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அதன்பின்னர் 1958இல் இருந்து சிறிது காலப்பகுதியில் இவர் இலங்கைப் பொது வேலைத் திணைக்களத்தில் தன்னை ஒரு உதவிப் பொறியியலாளராக இணைத்துக்கொண்டார். இக்காலகட்டத்தில் இலங்கைப் பல்கலைக்கழகம் வழங்கிய புலமைப்பரிசிலின் அடிப்படையில் இவரின் பிரத்தியேகத் திறமைகளை இனங்கண்டு கொண்ட கேம்பிறிஜ் பல்கலைக் கழகத்தின் மண்பொறியியற்துறைப் பேராசிரியர் கே.எச்.றொஸ்கோ இவரை ஆய்வு மாணவனாகத் தேர்ந்தெடுத்தார்.

இவர் மேற்கொண்ட ஆய்வுகளின் விளைவாக இவரினால வடிவமைக்கப்பட்டு அபிவிருககு செய்யப்பட்ட Cam clay model ஒன்று அவருக்கு சர்வதேசப் புகழை ஈட்டிக்கொடுத்தது மட்டுமன்றி எதிர்காலத்திய மண்பற்றிய ஆய்வுகளுக்கு ஒரு உந்துவிசையாக அமைந்தது டன புவிசார் எந்திரவியல் தொழில் நுட்ப உபகரணம் ஒன்றின் வளர்ச்சிப படிக்கல்லாகவும் கருதப்படுகின்றது.

இதன்பின்னர் 1962இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் குடிசார் எந்திரவியல்துறை விரிவுரையாளராகத் தன்னை இணைத்துக்கொண்டார். அக்காலகட்டத்தில் கொழும்பில் இயங்கி வந்த இப்பல்கலைக்கழகத்தின் எந்திரவியற் பீடம் பேராதனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டது. தனது ஆராய்ச்சித் திறமையில் இப்பல்கலைக்கழகத்தில் ஒரு தரமான ஆய்வுகூடத்தை நிறுவி அதனை நிர்வகிப்பதில் பெரும பங்கு வகித்தார். இலங்கை மண்ணின் பொறியியல் பண்புகளை ஆராய்வதற்கும் அவ் ஆய்வு கூடம் பெரிதும் பயன்பட்டது.

நாட்டில் ஏற்பட்ட குழப்ப சூழ்நிலைகளால் மற்றைய பல்கலைக்கழகங்கள் மூடபபட்டிருந்த போது யாழ்.பல்கலைக் கழகம் மிகச் சிறப்பாக இயங்கியதென்றால் அது பேராசிரியர் துரைராஜா எவ்வளவு மிகச் சிறந்த நிர்வாக திறமைமிக்கவர் என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றது அல்லவா?

1994 துணைவேந்தர் பதவியில் இருந்து விலகி திறந்த பல்கலைக்கழகத்தின் குடிசார் எநதிரவியல் பேராசிரியராகப் பொறுப பேற்றக்கொண்டார். பேராசிரியர் துரைராஜா அவர்களின் மறைவினால் நாம் சிறந்ததொரு பொறியயியல் மேதையையும் விஞ்ஞானியையும், ஆராய்ச்சியாளரையும, நிர்வாகியையும், பேராசிரியரையும் மட்டுமல்லாமல் மனிதநேயமிக்க சீரிய பண்பாளனையும் இழந்துவிட்டோம். அன்னார் பல்கலைக்கழக வட்டங்களால் மட்டுமல்லாமல் அனைத்து மக்களாலும் நேசிக்கப்பட்ட மாமேதை.

## மினி பஸ்ஸில் ‘பேர்ஸ்’ திருட்டு

(கோப்பாய்)

ஓடும் மினி பஸ்களில் அடைமழையைப் பயன்படுத்தி சில பெண் பயணிகள் சமயோசிதமாகத் திருட்டு நடவடிக்கைகளிலீடுபட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

அண்மையில் அச்சுவேலி-யாழ்ப்பாணம் மினிபஸ்ஸில் கோப்பாயல் ஏறிய மாணவர்களிடம் அவாகளின் கொப்பிகளையும், புத்தகங்களையும் வைத்திருப்பதாகப் பெண்ணொருவர் பெற்றுக் கொணடார். பின் அவர்கள் இறங்கும்போது அவர்களின் பேர்ஸை எடுத்துக் கொண்டு அவசரமாக இறங்கிய மாணவர்களிடம் கொப்பிகளையும, புத்தகங்களையும் கொடுத்துள்ளார். அவர்கள் இறங்கிய பின் மினி பஸ்ஸும் அவசரமாகத் தனது பயணத்தைத் தொடர்ந்தது. அதன் போதே மாணவிகள் தமது பேர்ஸ் (பணப்பை) வழங்கபபடாமையை அவதானித்து அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இதுபோன்ற சம்பவங்கள் சன நெருக்கடி மிக்க மினிபஸ்களில அடிக்கடி நடைபெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-79)

## சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு

(பருத்தித்துறை)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப பேரவையினரால் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடாத்தப்படும் வாராநத நிகழ்வுகளில் நாளை வெளளிக்கிழமை பருத்தித்துறை ஹாட்லிக கல்லூரி ஆசிரியர் சைவப் புலவர் எஸ்.நவரத்தினம் ‘ஆசை அறுத்த அறுவர்’ பறறிச் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

(அ-52)

## திருவாசகமுற்றோதல்

(மந்துவில்)

சாவகச்சேரி, அமிர்தபாசணி சமேத சந்திரசேகர வாரிவள நாத சிவன் ஆலயததில் மாதாந்தம் நடைபெறும் திருவாசக முற்றோதல் 13ஆம் திகதி காலை 6.30 மணி தொடக்கம் ஆலய அறங்காவலர் மா.கந்தையா தலைமையில் நடைபெறவுள்ளது.

(அ-102)

# தீவிபத்தில் வயோதிப மாது பரிதாபமாக மரணம்

(பருத்தித்துறை)

நுளம்புத்திரி ஆடையில் பட்டு தீப்பற்றியதால் உடல்முழுவதும் எரிகாயங்களுக்குள்ளான நிலையல் பருத்தித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வயோதிபப் பெண்ணொருவர் பரிதாபமாக மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது,

இவர் இரவு படுக்கைக்குச் செல்லும்போது தலைமாட்டில் நுளம்புத்திரியைக் கொளுத்தி விட்டு உறங்கியவேளையில், நள்ளிரவு 12.00 மணியளவில் நுளம்புத்திரி படுக்கையில் வழுந்ததால் அதனை தட்டுவதற்கு ஆடையை உதறியபோது பெற்றோல கானுக்கு அருகில் இந்நுளம்புத் திரி விழுந்ததால் தீவிபத்து ஏற்பட்டது.

இத் தீ விபத்தில் பல பெறுமதியான உடமைகள் எரிந்து நாசமானதுடன் செ.றோகினியம்மா வயது 65 என்ற பெண்மணி காயத்திற்குளளாகி மந்திகை மருத்துவமனையல் அனுமதிக்கப்பட்டிருந்தார். இவரது இரு பிள்ளைகளும் தெய்வாதீனமாக இத் தீ விபத்திலிருந்து தப்பியுள்ளனர்.

ஒருவாரகாலமாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இவர் சிகிச்சை பயனளிக்காமல் மரணமடைந்தார்.

பிரேத பரிசோதனையை பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி கலாநிதி எஸ்.கதிரவேற்பிள்ளை மேற்கொண்டார்.

மரண விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை பதில் மாவட்ட நீதிபதி எஸ்.தங்கராசா விபத்து மரணமெனத் தீர்ப்பளிததார். (அ-104)

## விவசாய அறிவுப் போட்டி

கொழும்பு ஜினசேன கொம்பனி யாழ்.மாவட்டத்திலுள்ள விவசாயிகளின் நன்மை கருதி ஒவ்வொரு பகுதியிலும் விவசாய அறிவுப் போட்டியை நடத்திவருகிறது.

அந்தவகையில் வடமராட்சியில் இன்று காலை 10 மணியளவில் புலோலி கமநல சேவை நிலையத்தில் நடாத்தவுள்ளது. இதில் சகல விவசாயிகளும் கலநது கொள்ளுமாறு கேட்கபபட்டுள்ளனர்.இதில் வெற்றிபெறுவோருக்கு பரிசுகள் வழங்கப்படும்.

(அ-35)

# இரு பிரதான வேட்பாளர்களுக்கும் பிரசாரங்களுக்கு சமமான வாய்ப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும இரண்டு பிரதான வேட்பாளர்களின் பிரசார நடவடிக்கைகளுக்கும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் சமமான வாய்பபு வழங்குவதாக கூட்டுத் தாபனததின் தலைவர் ஹட்சன் சமரசிங்க தெரிவித்துள்ளாா.

தேர்தல் கண்காணிப்புப் பணிகளுககாக இலங்கை வந்திருக்கும் ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்புக் குழுவின் ஊடக விற்பன்னரான அன்றி அமல்னொட் என்பவரை நேற்று முன்தினம் காலை ஹட்சன் சமரசிங்க சந்தித்தபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசாரங்களுக்கு நேரம் ஒதுக்கும் விடயங்களில் தேர்தல் ஆணையாளரின் வழிகாட்டல்களுக்கு அமையத் தாம நடந்து கொள்வதாகவும் சமரசிங்க கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை கூட்டுததாபன வளாகத்தில் இடம் பெற்ற இந்தச் சநதிப்பில் பல்வேறு விடயங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

# இன்று ஒரு தகவல்

## தர்மம்

ஒரேயொரு ஊரில் ஒரு ராஜா இருந்தாராம். அவர் ஒருநாள் மாறுவேடம் போட்டுக்கொண்டு நகர்வலம் வந்திருக்கிறார். இரவுநேரத்தில் ஒரு குதிரை மீது ஏறி தன்து நகரமெல்லாம் எப்படியிருக்கிறது என்று சுற்றிப் பார்த்துக்கொண்டே வருகிறார். நகரத்திற்கு வெளிப்பக்கமாக ஒரு ஆள் பரிதாபமாக உட்கார்ந்திருந்தான். அந்தப் பக்கமாக வந்த ராஜா இதைப் பார்த்தார். "ஏனப்பா இந்த நேரத்தில் இப்படி உட்கார்ந்திருக்கிறாய்?" என்று கேட்டார். "ஐயா... நான் ஊருக்குள்ளே போக வேண்டும் என்னைக் கொஞ்சம் உங்கள் குதிரை மீது ஏற்றிக் கொண்டு போய்விட்டீர்கள் என்றால் மிகவும் உதவியாக இருக்கும்" என்றான் அவன்.

"சரி! ஏறிக்கொள்!" என்றார் அவர். "என்னால் ஏறமுடியாது... நீங்கள் தான் என்னை தூக்கி அங்கே உட்கார வைக்க வேண்டும். ஏனென்றால் நான் கை கால் விளங்காதவன். எனது கால் இரண்டும் உணர்ச்சி இல்லாத மரக்கட்டை மாதிரி ஆகிவிட்டது. அதனால் தான் நடக்கமுடியாமல் இங்கேயே கிடக்கிறேன்" என்றான். 'ஐயோ... பாவம்' என்று பரிதாபப்பட்டு கீழே இறங்கினார். அவனைத் தூக்கி குதிரை மீது உட்கார வைத்தார்.

அவ்வளவு தான்... அந்த ஆள் குதிரையை அடித்து விரட்டிக்கொண்டு போய்விட்டான். ஆமாம்! அவன் நிஜமாகவே கை கால் விளங்காதவன் இல்லை. அவன் ஒரு திருடன். குதிரையை கடத்திக்கொண்டு போவதற்குத் தான் இதுபோல் வேஷம் போட்டிருந்தான். ராஜா ஏமாந்துபோய் கீழேயே நின்றுவிட்டார். அவருக்கு மிகவும் அவமானமாகிவிட்டது. இருந்தாலும் யாருக்கும் தெரியாமல் பேசாமல் அரண்மனைக்கு திரும்பி வந்துவிட்டார். இந்த விஷயத்தை யாரிடமும் சொல்லவில்லை.

கொஞ்சநாள் கழித்து ஒருநாள் அரண்மனையில் வழக்கு விசாரணை நடந்துகொண்டிருந்தது. ராஜா ஒவ்வொரு வழக்காக விசாரித்து தீர்ப்பு வழங்கிக்கொண்டிருந்தார். திடீரென்று ஒரு ஆளைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். "மன்னா... இவன் பல இடங்களில் திருடியிருக்கிறான். கொள்ளையடித்திருக்கிறான். நேற்றிரவு இவன் ஒரு வீட்டில் நுழைய முயற்சி செய்தபோது நமது காவலாளிகள் பார்த்துவிட்டார்கள். அதுதான் பிடித்து இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள்" என்றார் அமைச்சர்.

ராஜா நிமிர்ந்து பார்த்தார். அன்று தன்னை ஏமாற்றிய அதே ஆள்தான் இவன் என்பதைப் புரிந்துகொண்டார். ஆனால் அவனுக்கு இவரைத் தெரியவில்லை. ஏனென்றால் அன்று மாறுவேடத்தில் இருந்தாரல்லவா? அதுதான். ராஜா பார்த்தார் "தீர்ப்பு நாளை வழங்கப்படும்" என்று கூறிவிட்டு சபையைக் கலைத்துவிட்டார். அந்த ஆளைக்கொண்டு போய் சிறையில் அடைத்துவிட்டார்கள்.

அன்றிரவு எல்லோரும் தூங்கிய பின்பு ராஜா ரகசியமாக சிறைக் கூடத்திற்குப் போய் அந்த ஆளைப் பார்த்தார் "என்னை உனக்கு அடையாளம் தெரிகிறதா! நன்றாகப் பார்" என்றார். "என்ன இப்படிக் கேட்கிறீர்கள்? நீங்கள் மகாராஜா" என்றான். "அது இல்லை... இதற்கு முன்பு என்னை எங்காவது பார்த்த ஞாபகம் இருக்கிறதா?" என்று கேட்டார். 'இல்லையே!' என்றான். ராஜா தனது அலங்காரத்தைக் கலைத்தார். உடனே அந்த ஆளுக்கு ஞாபகம் வந்துவிட்டது.

"மன்னா! அன்று குதிரையைக் கடத்திக்கொண்டு போனது உங்களிடமிருந்தா? என்னை மன்னித்துவிடுங்கள்" என்று கூறிக் காலில் விழுந்தான். "இதோ பாரப்பா... எழுந்திரு. நான் சொல்வதைக் கவனமாகக் கேள். நாளைக்கு நான் தண்டனை கொடுக்கப்போவது 'நீ திருட முயன்ற வழக்கிற்காக. அன்று நீ என்னை ஏமாற்றியதற்கு நான் உன்னை தண்டிக்கப் போவதில்லை... அது மட்டுமல்ல நான் உன்னிடம் ஏமாந்த விஷயத்தை நீ யாரிடமும் கூறிவிடாதே! அந்த ரகசியம் நம் இருவருக்குள்ளும் தெரிந்ததாக இருக்கட்டும்" என்றார்.

இந்தக் கதையை ஒரு நண்பர் என்னிடம் கூறிவிட்டு அந்த ராஜா ஏன் அந்த ஆளிடம் அப்படிச் சொன்னார்? என்று ஒரு கேள்வி கேட்டார். நான் யோசித்துப் பார்த்துவிட்டுப் பதில் சொன்னேன். "ராஜாவே திருடனிடம் ஏமாந்துவிட்டார் என்ற விஷயம் தெரிந்தால் அது மிகவும் கேவலம் இல்லையா? அதனால் அப்படிச் சொல்லியிருப்பார்" என்றேன். நண்பர் சிரித்தார் "எல்லோரும் இப்படித்தான் சொல்கிறார்கள். ஆனால் அது காரணம் இல்லை" என்றார். "சரி நீங்களே சொல்லுங்கள்... ராஜா ஏன் அப்படிச் சொன்னார்?" என்று அவரிடமே கேட்டேன். அவர் சொன்னார்.

"அதாவது என்ன விஷயம் என்றால் அந்த சம்பவம் வெளியே எல்லோருக்கும் தெரிந்துவிட்டால் கஷ்டப்படுபவர்களுக்கு கை கொடுக்க எல்லோரும் தயங்க ஆரம்பித்துவிடுவார்கள். உண்மையாக கஷ்டப்படுகிறவனைக் கூட இவன் ஏமாற்றுப் பேர் வழியாக இருப்பானோ என்ற சந்தேகம் கொள்ள ஆரம்பித்து விடுவார்கள். அதன்பின் நாட்டில் தர்மம் கெட்டுவிடும். யாரும் உதவிசெய்ய முன்வரமாட்டார்கள். அப்படி ஒரு நிலைமை நமது நாட்டுக்கு வந்துவிடக்கூடாது என்பதற்காகத் தான் ராஜா அப்படிச் செய்தார்" இதுதான் நண்பன் கொடுத்த விளக்கம்!

"ராஜா என்றால் இப்படியல்லவா இருக்கவேண்டும்" என்றார்.

"இந்தக் கதையைக் கேட்ட பின் இப்படி நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை சார்" என்றேன். "எப்படி?" என்றார். ஒரு ஆள் குதிரையில் வந்துகொண்டிருக்கிறான். வழியில் ஒருவன் "ஐயா... எனக்கு கை கால் விளங்கவில்லை. எனக்கு உதவி செய்ய முடியுமா?" என்று கேட்கிறான். "வேண்டாம் நீ என்னை ஏமாற்றிவிட்டு இந்தக் குதிரையைக் கடத்திக்கொண்டுப் போய் விடுவாய்" என்கிறான் அவன். "ஆமு எப்படி அவ்வளவு சரியாகச் சொல்கிறாய்" என்று கேட்கிறான் இவன். அதற்கு அவன் "நான் ஏற்கனவே ஒருவனை அதுபோல் ஏமாற்றிவிட்டுத்தான் இந்தக் குதிரையைத் தள்ளிக்கொண்டு வருகிறேன்" என்கிறான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# இனத்துவேசத்தை கக்கும் பேரினவாதிகளா சமாதானம்- சமஷ்டி ஆட்சியை நிறுவுவார்கள்?

## யாழ். மாவட்ட அபிவிருத்தி நலவுரிமைச் சங்கம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளிடமிருந்து கருணாவைப் பிரித்தது ரணில் விக்கிரமசிங்கவே என்று தேர்தல் பிரசாரத்தில் நவீன் திஸாநாயக்க கூறியதையும், இந்தியப் படையையும், அமெரிக்கப் படையையும் கொண்டு விடுதலைப் புலிகளின் படைகளை அடக்குவோம் என்ற பேச்சையும் உள்ளடக்கத்தையும் கேட்டு தமிழ் பேசும் மக்கள் விழிப்படைந்துள்ளனர். இது சிங்கள வெறிபிடித்த பேரினவாதத்தின் உள்ளத்தில் கிடக்கும் திட்டமாகுமென யாழ். மாவட்ட அபிவிருத்தி நலவுரிமைச் சங்கம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இதுவிடயம் தொடர்பில் அச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில், காமினி திஸாநாயக்க ஆசியாக் கண்டத்திலே மிகப் பெரியதும், பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் உள்ள கல்வெட்டுகளும் புராதன கால நூல்களும் இருந்த யாழ்ப்பாண நூலகத்தை எரிக்கத் திட்டமிட்டுக் கொடுத்ததையும் எமது மக்கள் மறக்கமாட்டார்கள்.

1958 ஆம் ஆண்டு தொடக்கம் ஐ.தே.கட்சியின் தூண்டுதலில் சிறில்மத்துயு உட்பட பல அரசியல்வாதிகள் தமிழர்களுக்கு செய்த கொடுமைகளையும் நாம் மறக்கவில்லை.

காமினி திஸாநாயக்கவும் ஐ.தே.கட்சியும் இந்தியப் படையைக் கொண்டு வந்து மூக்கறுக்கப் பட்டதையும் மக்கள் மறக்கவில்லை. இந்தியா ஆயிரக்கணக்கான இந்தியப்படையை வடகிழக்கில் குவித்து விடுதலைப் புலிகளுடன் போரிட்டு மண்டியிட்டு தோல்வியுடன் திரும்பியதை அக் கட்சியினருக்கும் அவர்களுக்கும் கூறவிரும்புகின்றோம்.

அதுமட்டுமல்ல, அமெரிக்கப் படையையும் இந்தியப்படையையும் கொண்டு வந்து புலிகளுடன் போரிட ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டிருப்பதாக கிணிகத்தேன பிரசாரக் கூட்டத்தில் நவீன் திஸாநாயக்க கூறியிருந்தார். இம் மேடையில் மலையக மக்கள் முன்னணியின பிரதிச் செயலாளர் விஜயகுமார் இருந்ததாகவும் பத்திரிகை மூலமாக அறிந்தோம். மலையக மக்களின் இரு மாகாண சபை உறுப்பினர்களும் மஹிந்த ராஜபக்ஷவை பணம், பட்டம், பதவிக்காக ஆதரிப்பதை நாம் மறந்துவிடக் கூடாது. நவீன் திஸாநாயக்கவும் மஹிந்த ராஜபக்ஷவும் சில ஒப்பந்தங்களை ஏற்படுத்தி இனத்துவேசத்தைக் கிளப்பி தமிழ் மக்களின் மீது இன வெறி ஆட்டம் ஆடப்போகிறார்களா அல்லது ஐ.தே.க இனவாதத்தைத் தூண்டப் போகின்றதா! இப்படிப்பட்டவர்கள் நாட்டில் சமாதான, சமஷ்டி ஆட்சியை நிறுவுவார்களா?

அமெரிக்கா உலகில் இருக்கும் எந்த நாடுகளுடனும் போர்புரிந்து வெற்றி பெற்றதுண்டா? அண்மையில் ஈராக் நிலைமையையும் உணரவேண்டும். அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில்கிளிண்டன் தேசியத் தலைவர் வே.பிரபாகரனுடைய மூளையை நாம் விலைக்கு வாங்க வேண்டுமெனக் கூறியிருந்தார். அதிலிருந்து விடுதலைப் புலிகளின் பலத்தையும் நிர்வாகக் கட்டுப்பாட்டு நிலையையும் நவீன் திஸாநாயக்க சிந்திக்க வேண்டும். அத்தோடு இதனை இலங்கையில் உள்ள அரசியல்வாதிகளும் புரிந்துகொள்ளவேண்டும்.

வல்லரசு நாடாகிய இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் தலைமையின் கீழ் உள்ள விடுதலைப் புலி முப்படைகளும் கொண்டது என்றும் (தமிழ் பேசும் மக்கள் கூடுதலாக வாழுகின்ற) வடகிழக்கு ஒரு வல்லரசு நாடு என்பதையும் அமெரிக்கா ஏற்றுக் கொண்டுதான் எம்முடன் போர் புரிய வரவேண்டும்.

விடுதலைப் புலிகள் நல்ல பாடம் புகட்டுவர் என்பது திண்ணம். விடுதலைப் புலியென்றால் தமிழ் மக்கள், தமிழ் மக்கள் என்றால் விடுதலைப் புலிகள், இதனை எவராலும் பிரிக்கமுடியாது. நவீன் திஸாநாயக்கவின் துவேசத்துக்கு தகுந்த பதிலை ரணில் விக்கிரமசிங்க கூற வேண்டும். இரு பேரினவாதக் கட்சிகளிலும் தமிழ் பேசும் மக்களை அடக்கியாளவோ யுத்தமுனையில் சந்திக்கவோ எண்ணுகிறார்கள். விடுதலைப் புலிகள் அதனை உயிரா, சாவா என்ற திட்டத்துடன் எதிர்கொள்ளத் தயாராகவே உள்ளனர். புலிகள் விரும்பி யுத்தத்துக்குப் போகின்றவர்கள் அல்லர். யுத்தத்தைத் திணித்தால் எதிர்கொள்பவர்கள். அவர்கள் சமாதானத்தை விரும்பி நிற்கின்றனர். நவீன் திஸாநாயக்க மற்றும் ஜே.வி.பிபோன்றோரும் யுத்தத்தைத் திணிக்க முனைகின்றனர். ஆகவே தான் நாம் தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டுமென்கிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# தேர்தலைப் புறக்கணித்து— விடுதலைக்கு வலுச்சேர்ப்போம்

## தீவக விழிப்புணர்வுக் கழகம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தேர்தலைப் புறக்கணித்து விடுதலைக்கு வலுச் சேர்ப்போம் என தீவக விழிப்புணர்வுக் கழகம் அழைப்பு விடுத்துள்ளன.

இது தொடர்பில் அவ் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில்,

எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தமிழ் மக்களின் மனதில் இயல்பாகவே எழும் சில வினாக்களுக்கான விடைகளாக இவ் அறிக்கை அமைகின்றது.



### மஹிந்த ராஜபக்ஷ

தமிழர்களுக்கு தாயகம் என்று ஒன்றில்லை, சுயநிர்ணய உரிமை கிடையாது, யுத்த நிறுத்த உடன்படிக்கை மீளாய்வு செய்யப்பட வேண்டும், சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அனுசரணையாளராகச் செயற்படும் நோர்வேயை புறந்தள்ள வேண்டும் என்று வெளிப்படையாகவே இவர் இனவாதத்தைக் கக்கிவருவதுடன், தான் சிங்கள பௌத்த மக்களின் காவலன் என்றும் கூறி வருகின்றார்.

அத்துடன், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்குவதற்கான மறைமுக நிகழ்ச்சி நிரல் ஒன்றையும் இவர் கொண்டிருக்கிறார்.

### ரணில் விக்கிரமசிங்க

காலத்தை இழுத்தடித்து சர்வதேச வலைப் பின்னல் ஊடாக தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை ஒடுக்க முனைந்தவர் ரணில்.



இந்தியாவுடனும், அமெரிக்காவுடனும் பாதுகாப்பு உடன்படிக்கைகள் செய்ய பகீரதப்பிரயத்தனம் செய்த இவர் தமிழ் மக்களை ஒடுக்குவதற்கான அவசர காலச்சட்டத்திற்கு ஒத்துழைத்து பல இளைஞர்கள் கைதுசெய்யப்படவும், காணமால் போகவும் காரணமாக இருந்தவர். ஆகவே, இந்தத் தேர்தலானது ஸ்ரீலங்காவிற்கும் சிங்கள மக்களுக்குமான ஒரு அதிகாரமிக்க தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான ஒரு தேர்தலாகும்.

இத தேர்தலில் வாக்களிப்பதன் மூலம் தமிழ் மக்கள் எந்தப் பயனையும் அடையப்போவதில்லை. ஆனால் இந்தத் தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணிப்பதன் மூலம் பல நன்மைகளைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை எந்தவொரு சிங்களத் தலைவரும் நிறைவேற்றமாட்டார்கள் என்பதையும், எவர் மீதும் தமிழ் மக்கள் நம்பிக்கையைக் கொண்டிருக்கவில்லை என்பதையும் இதன்மூலம் சர்வதேசத்திற்கு எடுத்துக் கூறமுடியும்.

எனவே, தமிழ் மக்கள் அனைவரும் இதற்கு துணைபோகாமல் இந்தத் தேர்தலைப் புறக்கணித்து இனத்தின் விடுதலைக்கு வலுச்சேர்ப்பதே சரியானமுடிவாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

### தேர்தல் நடவடிக்கைகள் குறித்து

# பிரதிப் பொலீஸ் மா அதிபர்களுக்கு 13இல் இறுதி உத்தரவு வழங்கப்படும்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் சட்ட ஒழுங்குகளை நடைமுறைப்படுத்தும் முறைமைகள் குறித்த ஆலோசனைகளை வழங்கவென சகல பிரதிப் பொலிஸ்மா அதிபர்களும் கொழும்புக்கு அழைக்கப்படவுள்ளனர்.

சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலை உறுதிப்படுத்துவதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து இதன்போது இறுதி உத்தரவு வழங்கப்படும் எனப் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார். இந்த ஆலோசனை வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 13ஆம் திகதி நடைபெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக கண்காணிப்பதற்கென பொலிஸ்மா அதிபரின் தலைமையிலான விசேட கண்காணிப்பு நிலையம் ஒன்றும் செயற்பட்டு வருவதாக பெலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-7)

# ஞானச்சுடர் வெளியீடு

(பருத்தித்துறை)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் "ஞானச்சுடர்" கார்த்திகை மாத ஆவணி வெளியீட்டு விழா எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் சமாதான நீதவான் சிவ.ஆறுமுகசாமி வெளியீட்டுரையையும், பருத்தித்துறை நெல்லண்டை பத்திரகாளி அம்பாள் ஆலய பிரதமகுருதியாக. சோமாஸ்கந்தராஜா குருக்கள் மதிப்பீட்டுரையையும் நிகழ்த்தவுள்ளனர். (அ-52)

## 2007 - உலகக் கோப்பை போட்டிக்காக

# இளம் இந்திய வீரர்களை தயார்செய்யும் சோதனைகள் தொடரும் சப்பல் பேட்டி



2007ஆம் ஆண்டு உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்காக இளம் இந்திய வீரர்களைத் தயார் செய்வேன் என்றும் இதற்கான சோதனைகள் தொடரும் என்றும் பயிற்சியாளர் கிரேக் சப்பல் தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளில் 2007ஆம் ஆண்டு உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவுள்ளன. இதில் கோப்பையைக் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கத்தில அவுஸ்திரேலியா, இந்தியா, இலங்கை மற்றும் நியூசிலாந்து உட்பட பல நாடுகளும் அணியைத் தயார் செய்து வருகின்றன.

அவுஸ்திரேலியாவின் அனுபவமிக்க வீரரான கிரேக் சப்பல் தலைமையின் கீழ் இந்திய அணியும் இதற்கான முயற்சியில இறங்கியுள்ளது.

தற்போது இலங்கை அணிக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரில், முதல் நான்கு போட்டிகளில் இந்தியா வென்று 4-0 என்ற கணக்கில் தொடரை வென்றது. பின்பு அகமதாபாத் நகரில் நடந்த 5ஆவது போட்டியில் இந்திய அணியை 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இலங்கை வீழ்த்தி ஆறுதல் வெற்றியைப் பெற்றது.

அகமதாபாத் போட்டியில இந்திய அணி தோல்வியடைந்தபோதிலும், இந்திய அணியின் சோதனை முயற்சி தொடரும் என்று சப்பல் கூறியுள்ளார்.

மேலும், இலங்கை அணிக்கு எதிரான 6ஆவது ஒருநாள் போட்டியிலும் இளம் வீரர்களின் சோதனை நடத்தப்படும என்றும் அவர் கூறியுள்ளார்.

அகமதாபாத் போட்டியில் இந்திய அணி தோல்வியடைந்தபோதிலும், இளம் வீரர்களை வைத்து நடத்தப்பட்ட சோதனையில் இந்தியாவுக்கு நல்ல பலன் கிடைத்துள்ளது. மேலும் 2007ஆம் ஆண்டு உலகக் கோபபை போட்டிக்காக இளம் வீரர்களுக்கு அதிக அளவில் சந்தர்ப்பம் அளிக்கப்படும். இதன் மூலம் அவர்கள் அனுபவத்தையும், தன்னம்பிக்கையையும் பெறுவார்கள் என்றும் சப்பல் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த போட்டியின் போது சச்சின் டெணடுல்கர், இர்பான் பதான் மற்றும் ஹர்பஜன சிங் போன்ற முன்னணி வீரர்களுக்கு ஓய்வு அளிக்கப்பட்டது. இவர்களுக்குப் பதிலாக இளம் வீரர்கள் களம் இறக்கப்பட்டனர். இதனால் இலங்கை அணி போராடி வெற்றி பெற்றது.

இது குறித்து சப்பல் கருத்துக் கூறுகையில்,

'வெற்றிக்கும் சோதனைக்கும் இடையே சமச்சீர் நிலையை ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இளம் வீரர்களின் மூலம் இந்திய அணி வெற்றி பெற நீண்ட காலம் ஆகும். அதாவது இன்னும் 12-18 மாத காலம் ஆகும்' என்றார்.

சர்வதேச அளவிலான போட்டிகளில் இளம் வீரர்கள் முதலில் தடுமாற்றம் அடைவார்கள். சில தவறுகளையும் புரிவார்கள். இடையிடையே அவர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டால்தான் அவர்கள் 2007ஆம் ஆண்டு உலகக் கோப்பைக்கு முன்பு தேர்ச்சியடைநது சிறந்த வீரர்களாக உருவாக முடியும் என்றும் அவர் கூறினார்.

'இந்தத் தொடரில் நாங்கள் வெற்றி பெற்றுவிட்டோம். மீதமுள்ள போட்டிகளில் இளம் வீரர்களுக்கு வாய்ப்புக்கள் வழங்கப்படும்' என்று கப்டன் டிராவிட் குறிப்பிட்டுள்ளார். (ற)



தாய்லாந்து நாட்டில் உள்ள பாதும் நகரில் உலக பெண்கள் குத்துச் சண்டை போட்டி நடந்தது. இதில் ஜப்பான் வீராங்கனை நனாகா (இடது) தாய்லாந்து வீராங்கனை நான்மாய் ஆகியோர் மோதிய காட்சி. இதில் நனாகோ வெற்றி பெற்றார்.

# டேவன் போர்ட் - கிளிஜஸ்டர்ஸ் இடையே கடும் போட்டி

உலக மகளிர் ஒற்றையர் தரவரிசைப் பட்டியலில் இந்த வருடத்தின் கடைசியில் முதல் இடத்தைப் பிடிப்பதில் டேவன்போர்டுக்கும், கிளிஜஸ்டர்ஸுக்கும் இடையே கடும் போட்டி நிலவி வருகிறது.

வில்லியம் சகோதரிகள் இந்த இடத்திற்கு போட்டியிடாத போதிலும், இதற்கு போடடியிடும் ஒரே அமெரிக்க வீராங்கனை டேவன் போர்டுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது இரண்டாவது இடத்தில் உள்ள கிளிஜஸ்டர்ஸை விட, டெவன்போர்டு தற்போது 155 புள்ளிகள் முன்னணியில் இருக்கிறார். இந்த வருட சீசன் போட்டிகள் விரைவில் முடிவடையவிருக்கின்றன. இதன் ஒரு போட்டி ஸ்டேபிள்ஸ் மையத்தில் நேற்று முன் தினம் ஆரம்பமாகியது.

புள்ளி விபரங்களின் அடிப்படையில் கிளிஜஸ்டர்ஸ் முன்னணியில் இருக்கிறார். அவர் மொத்தம் 66 போட்டிகளில் வெற்றியையும், 9 பட்டங்களையும் இந்த சீசனில் பெற்றிருக்கிறார்.

ஆனால், அமெரிக்க முன்னணி வீராங்கனையான லிண்ட்சே டேவன்போர்டு 6 பட்டங்களையும், 59 வெற்றிகளையும் இந்த சீசனில் பெற்றிருக்கிறார்.

'இது போன்ற ஒரு கடும் சவாலான சீசன் எனக்குக் காத்திருக்கும் என்று நான் நினைக்கவில்லை' என்று பெல்ஜியத்தின் முன்னாள் முதல் நிலை வீராங்கனையான கிம்கிளிஜஸ்டர்ஸ் கூறியுள்ளார்.

கடந்த வருடம் கைக்காயத்திற்காக சத்திரசிகிசசை செய்துகொண்டதால், அவர் போட்டிகளில் பங்குகொள்ள முடியவில்லை.

இந்த வருட சீசன் முடிவில் முதல் இடத்தைக் கைப்பற்ற டேவன்போர்டு முயற்சித்து வருகிறார். அவர் அப்படி முதலிடத்தைக கைப்பற்றும் பட்சத்தில் அது அவரது டெனனிஸ் வாழ்க்கையில் இந்த இடத்தைப் பிடிப்பது 4ஆவது முறையாக இருக்கும்.

இது குறித்து டேவன் போர்ட் கூறுகையில், முதல் இடத்தைப் பிடிப்பது பெரிய இலட்சியமாகும். இந்தவாரம் எனக்கு இது ஒரு பெரிய ஊக்கசக்தியாக உள்ளது. இது எனக்கு கிடைக்காத பட்சத்தில் நான் அதிகம கவலை கொள்ளமாட்டேன். கிளிஸ்டர்ஸும் இதற்கு முயற்சி செய்வார் என்றார்.

ஒரு வருட இடைவெளிக்குப் பிறகு கிளிஜஸ்டர்ஸும் மீண்டும் முதல் இடத்தைக் கைப்பற்ற முயற்சி செய்து வருகிறார்.

தவிர, இந்த ஆண்டு கிம்கிளிஜடர்ஸ் அமெரிக்க ஓபன் கிராண்ட் ஸ்லாம் பட்டத்தைக் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க ஓபன் போட்டிக்குப்பிறகு டேவன்போர்டும், கிளிஸ்ஜஸ்டர்ஸும் நன்றாக ஆடி வருகிறார்கள்.

அமெரிக்க ஓபன் காலிறுதியில் டேவன் போர்டு மூன்று செட் ஆட்டத்தில் ரஷ்ய வீராங்கனை டெவன்டீவாவிடம் தோற்றார்.

அதற்குப் பிறகு டேவன்போர்டு பங்கேற்ற மூன்று போட்டிகளிலும் வெற்றி பெற்றிருக்கிறார். அதேபோல கிறிஸ்டர்ஸ் கலந்துகொண்ட மூன்று போட்டிகளிலும் வென்றிருக்கிறார். (ற)

## விளையாட்டு செய்திகள்

# டோனியை மணக்க போட்டா போட்டி



இந்திய கிரிக்கெட் அணியின் இளம் புயல மகேந்திரசிங் டோனியை மணக்க பணக்கார வீட்டுப் பெண்கள் போட்டி போட்டுக் கொண்டு இருப்பதாகத் தெரிவிக்கப் படுகினறது.

இந்திய கிரிக்கெட் அணியில் இளம் புயலாக மகேந்திரசிங் டோனி உருவெடுத்து இருக்கிறார். இலங்கைக்கு எதிராக 183 ரன் குவித்த அவருடைய சிறப்பான ஆட்டம் டோனிக்குப் பெரும் புகழைச் சம்பாதித்துக் கொடுத்துள்ளது. டோனி ஜார்க்கண்ட மாநிலத்தைச் சோந்தவர். அவருக்கு 25 வயது ஆகிறது. இன்னும் திருமணம் ஆகவில்லை. அவரை மணக்க பண்கார வீட்டுப் பெண்கள் போட்டிபோட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

இதுபற்றி டோனியின் தந்தை பான்சிங் நிருபர்களிடம் கூறுகையில்,

டோனி கிரிக்கெட்டில் இன்னும் நிறைய பெயரும் புகழும் சம்பாதிக்கவேண்டும் என்கிற விருப்பத்துடன் இருக்கிறார். ஆனாலும் பல பெண்களுடைய பெற்றோா என்னை அணுகி டோனிக்குப் பெண் கொடுக்கிறோம். சக்கிரம் திருமணத்தை வைததுக்கொள்ளலாம என்று வற்புறுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

டோனி கிரிக்கெடடில் இன்னும் நிறைய சாதிக்க வேண்டும் என்கிற இலட்சியத் தோடு இருப்பதால் இப்போது திருமணம் வேண்டாம் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார். ஆனாலும் ஒரு காலக்கட்டத் தில் மகனுக்கு திருமணம் செய்து வைக்க வேண்டியது பெற்றோருடைய கடமை. அதன் படி உலகக கோப்பைப் போட்டி முடிந்தபிறகு டோனிக்கு திருமணம் செய்து வைக்க நினைத்திருக்கிறோம் என்றார். (ற)



ராஜ்கோட் மாதவராவ் சிந்தியா ஸ்டேடியத்தில் நேற்று முன்தினம் இந்திய வீரர்கள் பயிற்சியில்....

# இந்திய வீரர்களுக்கு உதவ லட்சுமி மித்தல் முன்வருகை

ஒலிம்பிக் போட்டியில் இந்தியா பதக்கங்களைப் பெற வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு உதவ இந்தியாவின் முதல பணக்காரரும், இலண்டனில் வசிப்பவருமான லட்சுமி மித்தல் முன் வந்துள்ளார்.

இதற்காக அவர் 'மித்தல் சாம்பியன் அறக்கட்டளை' என்ற பெயரில் ஒரு அமைப்பை ஏற்படுத்தியுள்ளார். பதக்கம் பெறுவார் என எதிர்பார்க்கப்படும் வீரர்களை தேர்வுசெய்ய அவர்களுக்கு இந்த அறக்கட்டளை உதவிகள் செய்யும் இதற்காக ரூ.40 கோடியை ஒதுக்கி அவர் இருக்கிறார்.

சென்னையைச் சேர்ந்த ஸ்குவாஷ் வீராங்கனை ஜோஸ்னா சின்னபப்பாவுக்கு இந்த அறக்கட்டளை உதவ முன் வந்துள்ளது. இதற்காக அவருடன் நேற்றுமுன்தினம் ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. (ற)

# ஹர்பஜனின் 'தூஸ்ராவை' பின்பற்ற முயர்சி செய்து வருகிறேன்

### -ஜோகன் போத்தா

இந்தியாவின் முன்னணி சுழற்பந்து வீசசாளரான ஹர்பஜன்சிங்கை பின்பற்ற முயற்சி செய்வதாக தென்னாபிரிக்க இளம் பந்துவீச்சாளர் ஜோகன் போத்தா தெரிவிததுள்ளார்.

தென்னாபிரிக்க அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இந்திய அணிக்கு எதிராக விளையாடவிருக்கிறது.

தென்னாபிரிக்க அணி நாளை வெள்ளிக்கிழமை மும்பை சென்றடையவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையே 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர் எதிர்வரும் 16ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை நடைபெறவுளளது.

இந்தியச் சுற்றுப்பயணத்திற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள மூன்று சுழற்பந்து வீச்சாளர்களில் ஜோகன் போத்தாவும் ஒருவர். 23 வயதான போத்தா முதன்முறையாக தென்னாபிரிக்க அணிக்கு தேர்வு செய்யப்பட்டிருக்கிறார். இவர் போர்ட் எலிசபெத் நகரைச் சேர்ந்தவர்.

முதலில் மிதவேகப் பந்துவீச்சாளராகத் தனது கிரிக்கெட் வாழ்கையைத் தொடககிய போத்தா பின்பு அதிலிருந்து சுழற்பந்து வச்சுக்கு மாறினார். கடந்த 2003ஆம் ஆண்டு உலகக் கோப்பைப் போட்டிகள் தென்னாபிரிக்காவில் நடைபெற்ற போது இந்திய சுழற்பந்துவீச்சாளர் ஹர்பஜனின் பந்துவீச்சு போத்தாவை மிகவும் கவர்ந்தது. இந்தியாவின் முன்னணி சுழற்பந்து வீச்சாளாரான ஹர்பஜன்சிங் 'தூஸ்ரா' வகை பந்துகளை வீசுவதில் மிகவும் தேர்ந்தவராவார்.

இந்த 'தூஸ்ரா' வகை பந்து வீச்சின் மூலம ஹர்பஜன் அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருப்பதும் குறிப்பிடத்தககது. லெக்ஸ்பின் பந்துவீச்சாளர்கள் பேட்ஸமென்களை ஏமாற்றும் வகையில் வீசப்படும பந்துகள் ஹுக்ளி எனப்படும். ஆப் ஸ்பின் பந்துவீச்சாளர்கள் பேட்ஸ்மேன்களை ஏமாறற பயன்படுத்தும் பந்துவீச்சு 'தூஸ்ரா' எனப்படும.

கடந்த உலகக் கோப்பை போட்டியின் போது, ஹர்பஜனின் தூஸ்ரா வகை பந்துகளை தென்னாபிரிக்கா இளம் வீரர் போத்தா உன்னிப்பாக கவனித்து வந்தார்.

ஹர்பஜனின் பந்துவீச்சை பின்பற்றி தனது பந்துவீச்சு நுணுக்கத்தை வளர்த்துக் கொள்ளவிருப்பதாகவும் போத்தா கூறியுள்ளார்.

இது தொடர்பாக போத்தா குறிபபிடுகையில்,

'தென்னாபிரிக்காவில் நடந்த 2003 ஆம் ஆண்டு உலகக் கோப்பை போட்டியின் போது, ஹர்பஜனை தொடர்பு கொண்டு பேசினேன். அவரிடமிருந்து சில பந்துவீச்சு நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டேன். தவிர, தொலைக்காட்சியில் அவர் பந்து வீச்சைத் தொடர்ந்து உன்னிப்பாகக் கவனித்தேன்' என்றார்.

"தூஸ்ரா பந்துகளை எப்படி வீசுவது என்று நான் அவரிடமிருந்து கற்றுக்கொண்டேன். அவரது வழியைப் பின்பற்றி எனது பந்துவீச்சை வளர்த்துக்கொள்ள முயற்சிக்கிறேன்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், "இந்தியாவுக்கு எதிரான இந்த முதல் பயணம் சவாலானது. இருந்தபோதிலும் நான் பதட்டப்படாமல் போட்டிகளில் ஆடுவேன்" என்றும் அவர் கூறியுள்ளார். (ற)

ஆலோசனை நல்லதாய் இருந்தால் அதனை எவர் கூறினார் என்பது பற்றி கவலை கொள்ள வேண்டாம். -அப்துற் றஹீம்

வலம்புரி

## பிரதமர் மகிந்தவை விழுத்த தயாரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டம்

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாசிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்டம் மக்களின் எதிர்பார்ப்புகள் எதனையும் பூர்த்திசெய்யக் கூடியதாக இல்லை.

வழமைப்படி அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தை இந்த ஆண்டின் நவம்பர் மாதப்பகுதியில் சமர்ப்பிக்க வேண்டுமென்ற முறைமைக்கு அமைவாக நிதியமைச்சர் கலாநிதி சரத அமுனுகம வரவு செலவுத்திட்டத்தை வாசித்துள்ளார்.

இது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் வரவு செலவுத்திட்டமென்று நிதியமைச்சரே கூறியுள்ளார் எனில் அதற்குள் இருக்கக் கூடிய உள்ளார்ந்தமான விடயம் உணரப்படவேண்டிதொன்று.

நிதியமைச்சராக சரத் அமுனுகம இருந்த போதிலும், ஜனாதிபதியின் வழிநடத்தலின் வரவுசெலவுத்திட்டம் தயாரிக்கப்படவேண்டியதன் தேவை ஏன் என்ற வினா இங்கு எழுகின்றது.

அதேநேரம் ஜனாதிபதியின் ஆலோசனைப்படி வரவுசெலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தாலும் அதனை 'ஜனாதிபதியின் வரவு செலவுத்திட்டம்' என நிதியமைச்சர் வெளியிட்டதற்கான காரணம் என்ன? என்பது அடுத்து எழும் கேள்வி.

நிதியமைச்சரால் வரவுசெலவுத்திட்டம் தயாரிக்கப்படுவதாயினும்-அதில், ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் தலையீடு இருக்கவே செய்யும்.

எனினும் அத்தகைய தலையீடு பற்றி நிதியமைச்சர் வெளியில் பகிரங்கப்படுத்துவதில்லை. அதனால் வரவுசெலவுத்திட்டத்தின் ஒட்டு மொத்தமான தயாரிப்பும் நிதியமைச்சராலேயே மேற்கொள்ளப்படுகிறதெனும் முடிபு எடுக்கப்படுகின்றது.

ஆனால் 2006 ஆம் ஆண்டிற்காக நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நிதியமைச்சரினால் வாசிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்டமானது, ஜனாதிபதி சந்திரிகாவினது திட்டம் என்று நிதியமைச்சர் கூறுவதற்கு இரண்டு காரணங்களே இருக்க முடியும்.

அதில் ஒன்று தயாரிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்டம் நாட்டு மக்களுக்கு பல்வேறு அனுகூலங்களைத்தருவதாக இருக்கின்றது.

அரச உத்தியோகத்தர்களுக்கு நிறைந்த சலுகைகளைக் கொடுக்கின்றது. இவ்வாறு பாராட்டப்படக்கூடிய வரவுசெலவுத்திட்டமாக இருப்பதானால் அதனை ஜனாதிபதியின் தயாரிப்பென கூறி அவருக்கு விடைபெறும் காலத்தில் புகழ் கிடைப்பதற்கு வழிசெய்வதாக இருக்கலாம்.

அல்லது வரவுசெலவுத்திட்டம் யாருக்கோ பாதிப்பு ஏற்படுத்தப்போகிறது. அதிலிருந்து தப்பிக்கொள்ள வேண்டும். ஆகவே அது ஜனாதிபதியின் தயாரிப்பென கூறுவதே உசிதமானது என்ற நிலைப்பாட்டில் அவ்வாறு சொல்லியிருக்க முடியும்.

இந்த இரண்டு காரணங்களில் முன்னையது பொருந்தாதென்பதால் பின்னையதே சரியானதா?அவ்வாறாயின் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதமர் மகிந்தவை சரிப்பதற்காக தயாரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டமே இது என்ற முடிபுக்கு நாம் வர முடியும்.

# தேசியப் பாடசாலைகளில் கடமையாற்றும்— தொண்டர் ஆசிரியர்களுக்கும் நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தேசியப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக பணிபுரிவோரும் நிரந்தர நியமனத்திற்கான நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர் பற்றாக்குறை பல பாடசாலைகளில் மிக மோசமான நிலையில் இருந்த காரணத்தினால் தத்தமது கிராமங்களின பாடசாலை மாணவர்களது கல்வித் தரம் குன்றிவிடுமோ என்ற நிலையில் அந்தந்தப் பாடசாலைகளைச் சேர்ந்த பாடசாலை அபிவிருத்திச் சபையினர் தொண்டர் அடிப்படையில் பாடசாலைகளில் ஆசிரியர்களாகப் பணிபுரிய முன்வந்த தராதரம் உள்ள இளைஞர், யுவதிகளை தமது பாடசாலைகளில் பணியாற்ற ஏற்பாடு செய்திருந்தனர்.

இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதன் மூலம இவர்களது தன்னலமற்ற சேவை கௌரவிக்கப்பட வேண்டும் என்ற நிலையில் நிரந்தர நியமனம் வழங்கும் நோக்கில் வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றிய தொண்டர் ஆசிரியர்கள் மாகாணக் கல்வி அமைச்சினால் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

ஆனால தேசியப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்கள் இந் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருக்கவில்லை. இவ்விடயம் தொடா பாக வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோவினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் வடக்கு-கிழக்கு மாகாணத்தின கல்வி தொடர்பாக நடாத்தப்பட்ட மூன்றுகூடலில் வ்வாதிக்கப்பட்டபோது தேசியப் பாடசாலைகள் மத்திய அரசாங்கத்தின் கீழ் வருவதனால் இவ்விடயம் மத்திய அரச கல்வி அமைச்சின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படவேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட தேசியப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றி வரும் 24 ஆசிரியர்கள், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம அடைக்கலநாதனை நேரில் சந்தித்து தமது தளர்வற்றதும், நிச்சய மற்றதுமான நிலையை அவரிடத்தில முன்வைத்தனர்.

இதுவிடயம் தொடர்பாக கடந்த செப்ரெம்பர் 30ஆம் திகதி AD/ED/2005/8 இலக்கக் கடிதத்தின் மூலம் செல்வம் அடைக்கலநாதன் எம்.பியால் வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநரதும் மத்திய கல்வி அமைச்சின் செயலாளரினதும் கவனத்தில் கொண்டுவரப்பட்டது.

இத்துடன் நின்றுவிடாது மத்திய கல்வி அமைச்சின் தேசியப் பாடசாலைகளின் பணிப்பாளர் டக்ளஸ் ரணசிங்கவுடன் கடிதம் மூலமும் தொலைபேசி மூலமும் தொடர்பு கொண்டதும் அல்லாமல் தேசியப் பாடசாலைகளின் தொண்டர் ஆசிரியர்களது இரு பிரதிநிதிகளுடன் இப் பணிப்பாளரை அவரது காரியாலயத்தில் நேரில் சந்தித்தும் இத் தொண்டர் ஆசிரியர்களின் நிலைமையை அவர் எடுத்துக்கூறினார்.

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநரிடமிருந்து தேசியப் பாடசாலைகளின் தொண்டர் ஆசிரியர்கள் என்ற தலைப்பின் கீழ் வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு வரையப்பட்டு அடைக்கலநாதன் எம். பிக்கு பிரதியிடப்பட்ட NE/GN/SE/PS/01 இலக்க 24.10.2005 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் தேசியப் பாடசாலைகளில் பணிபுரியும் தொண்டர் ஆசிரியர்களை மாகாண மட்டத்தில் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கும் படி மத்திய கல்வி அமைச்சின் செயலாளரிடமிருந்து அனுமதி கிடைத்திருப்பது சுட்டிக்காட்டப்பட்டு அதற்குரிய நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநரால் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. (ற)

# 5 இலட்சம் ரூபா செலவில் வல்லியானந்தம் விளையாட்டுக் கழகத்திற்கு மண்டபம்

(கொழும்பு)

துன்னாலை வல்லியானந்தம் விளையாட்டுக் கழகத்திற்கு சுமார் 5 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட மண்டபம் கடந்த திங்கட்கிழமை இரவு 9மணிக்கு ஐக்கிய இராச்சிய துன்னாலை மக்கள் சங்கத் தலைவர் வா.சாந்தலிங்கத்தினால் திறந்துவைக்கப்பட்டது.

விளையாட்டுக்கழக செயலாளர் சு.இந்திரதாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வரவேற்புரையை கழக உறுப்பினர் இ.கமல்குமாரும் விருந்தினர்கள் உரையை துன்னாலை வடக்கு கிராம அலுவலர் சோ. கிருஷ்ணராஜா,வடபிராந்திய போக்குவரத்து சபையின் செயலாற்று முகாமையாளர் செ:கமலநாதன்,கழகக் கணக்காய்வாளர் தம்பையா,விளையாட்டுக்கழக ஸ்தாபகர் ரதிகரன் ஆகியோரும் ஆற்றினர்.

மங்கள விளக்கினை வருகை தந்த விருந்தினர்கள் ஏற்றிவைக்க பெயர்ப்பலகையை கிராம அலுவலர் சோ. கிருஷ்ணராஜா திரைநீக்கம் செய்தார். மண்டப பிரதான வாயிலை ஐக்கிய இராச்சியத்தில் நிதி சேகரித்து அனுப்பிய அன்பரும் ஐக்கிய இராச்சிய துன்னாலை மக்கள் தலைவருமான வா.சாந்தலிங்கம் திறந்து வைத்தார். நன்றியுரையை கழக உறுப்பினரான ஞானலிங்கம் பிரதீபன் ஆற்றினார். ஆயில் நின்றொல்லை ஆலயத்தின் பின் வீதியில் அமைக்கப்பட்ட மேற்படி மண்டபத்திற குரிய காணி ஊர்மக்கள் மூலம் சேகரிக்கப்பட்ட நிதி மூலம் கொள்வனவு செய்யப்பட்டது. மண்டப செலவுக்கான நிதி ஐக்கிய இராச்சியத்தில் தஞ்சம் புகுந்திருக்கும் துன்னாலைப் பகுதி மக்கள் மூலமும் திரட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி மண்டபம் களஞ்சிய அலுவலக அறை, கேட்போர் கூடம் எனப் பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளதால் விளையாட்டுக்கழக உபகரணங்கள் வைத்து பாதுகாக்கக் கூடியதாகவுள்ளது. (து-101)

# ரணிலை ஜனாதிபதியாக்க— பாதாள உலகக் குழுக்கள் முயற்சி

## -அமைச்சர் மங்கள குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் பரப்புரைகளுக்காக பாதாள உலகக் குழுக்கள், தரகர்கள், போதைப்பொருள் கடத்தல்காரர்கள் பெருந்தொகைகளை அளித்துள்ளதாக அமைச்சர் மங்கள சமரவீர குற்றம்சாட்டியுள்ளார்.

மங்கள சமரவீர இது தொடர்பில் கூறுகையில்,

இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் பிரசாரத்திற்காக ரணில் விக்கிரமசிங்க இதுவரை 684 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளார். இந்தத் தொகையை ரணிலை அதிகாரத்துக்குக் கொண்டுவர விரும்புகிற பாதாள உலகக் குழுக்கள், தரகர்கள்,போதைப் பொருள கடத்தல்காரர்கள் அளித்துள்ளனர்.

அரசாங்க அமைச்சர்கள் தொடர்பில் அவதூறு விளம்பரங்களை வெளியிடும் இலத்திரனியல், ஊடகங்கள் சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிடும். இது தொடர்பில் லங்காதீப மற்றும் இரு தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களுக்குச் சட்ட நடவடிக்கைத் தாக்கீது அனுப்பியுள்ளோம்.

தொலைக்காட்சி விவாதங்களில் ஜே.வி.பி உறுப்பினர்கள் பங்கேற்பதை சில ஊடகங்கள் தடை செய்துள்ளன. ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தேர்வு செய்யப்பட்டால் தமது சட்டவிரோத செயற்பாடுகளைத் தொடர்வதற்காகவே அந்த நிறுவனங்கள் இத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்கின்றன.

அரசாங்கத்தால் அளிக்கப்படும் உரிமங்கள் மூலமாக ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்க அந்த நிறுவனங்கள் முயற்சிப்பதை நாம் அனுமதிக்க முடியாது என்றார்.

மங்கள சமரவீரவின் இந்தக் குற்றச்சாட்டுககளை சுவர்ணவாஹினி தொலைக்காட்சி மேலாண்மை இயக்குநர் ஜீவிக எதிரிசிங்க நிராகரித்துள்ளார். (ற)

# முள்ளுக்கம்பி கொழுவி வயோதிபர் காயம்

(சாவகச்சேரி)

லொறியில் கொழுவி இழுத்துவரப்பட்ட முள்ளுக்கம்பி தெருவில் நடந்து சென்றவரை கொழுவி இழுத்ததால் அவர் படுகாயமடைந்தார்.

சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த க.கார்த்திகேசு என்ற 75 வயது முதியவரே இச் சம்பவத்தில் காயமடைந்தவராவார். இச்சம்பவம் மீசாலையில் இடம்பெற்றது.காயமடைந்தவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார். (து-108)

## சாயி அருளமுதம்



கடவுள் மீது நம்பிக்கையில்லாவிடின் மனிதன் அந்தகனாயிருப்பான் என குருநானக் கூறினார். உங்களுடைய வாழ்க்கையானது தாஜ்மஹால் போல் ஆடம்பரமாகவும், அழகாகவும், செல்வச் செழிப்புடனும் இருந்தாலும் தெய்வ நம்பிக்கையில்லாவிடின் நீங்கள் ஒரு நடமாடும் பிரேதம் தான். தாஜ்மஹால் ஒரு கல்லறை தானென்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். எந்த முறைப்படி வழிபட்டாலும் எந்த நாமத்தை அல்லது ரூபத்தை ஆராதித்தாலும் நம்பிக்கை விசுவாசமே வேண்டப்படுவது. மேல்நிலை அடைவதற்கு உயிரும் சக்தியும் அளிப்பது நம்பிக்கை விசுவாசமே.

நாளாந்த நற்சிந்தனை

# இனிமேல் இராணுவத்துக்கு எதிரான யுத்தம் மாதக்கணக்கில், வருடக்கணக்கில் நீடிக்காது!

## தமிழீழ கடற்படைத் தளபதி விநாயகம்

(கிளிநொச்சி)

**சிறிலங்கா இராணுவத்துக்கு எதிராக இனிமேல் இடம்பெறும் யுத்தம் மாதக்கணக்கிலோ, வருடக்கணக்கிலோ நீடித்துக்கொண்டிருக்காது. இவ்வாறு தமிழீழ கடற்படையின் தளபதிகளில் ஒருவரான விநாயகம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

லெப்.கேணல் நாவரசன் தமிழீழக் கடற்படை துணைப்படை பயிற்சிப் பாசறையில் 120 பேர் கொண்ட மூன்றாம் அணிப் பயிற்சி நிறைவு நிகழ்வு நேற்று முற்பகல் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றிய அவர் மேலும் பேசுகையில்,

தமிழீழம் என்ற இலட்சியக் கோட்பாட்டிலே உரிமைகளை வென்றெடுப்பதற்காக, உரிமைப் போராட்டத்தில் தோளோடுதோள் நின்று பரந்து விரிந்து கிடக்கும் கடலில் எதிரிகளைத் துரத்துவோம் என்ற வீர இறுமாப்போடு இப்பிரதேசத்தில் வாழுகின்ற நீங்கள் துணைப்படைப் பயிற்சிகளை மேற்கொள்ள வந்துள்ளீர்கள்.

உங்களுக்குத் தமிழீழ கடற்படையின் சார்பில் எமது புரட்சிகர வணக்கங்கள்.

நாங்கள் இதுவரை காலமும் எல்லா வடிவிலும் பேசிக் கதைத்து ஏமாந்த வரலாறுதான் தமிழீழத்தில் உள்ளது. அரசாங்கம் நமக்கு எதுவுமே தரப்போவதில்லை என்பதுதான் இன்றும் அரங்கேறிக்கொண்டிருக்கிறது.

இன்று இலங்கைத் தீவில் இரு தலைவர்கள் - ஒன்று சந்திரிகா மற்றொன்று தலைவர். இலங்கைத் தீவில் இன்று இரு படைகள் ஒன்று தமிழீழ இராணுவம்; மற்றது சிறிலங்காப் படை.

சமாதான காலத்திலும் நாம் நேர்மையாகவும், நீதியாகவுமே அணுகிவருகிறோம். ஆனால் இந்த மூன்றரை ஆண்டுகாலத்தில் 116 பேராளிகள் வீரச்சாவைத் தழுவியதும், தமிழ்மக்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டதும்தான் தமிழீழத்திற்குக் கிடைத்திருக்கிறது.

சமாதானம் என்ற பெயரில் எங்களுடைய போராட்டத்தை சிதைக்கிற நடவடிக்கைகளும் தமது ஆக்கிரமிப்பை விரிவு செய்கிற நடவடிக்கைகளுமே சிறிலங்கா அரசால் செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

தமிழ்மக்களைப் பலவீனப்படுத்துவதுதான் தமது சமாதான நடவடிக்கைகளின் இலக்கு என்று சிறிலங்கா அரசுகள் தம்மைத் தாமே அம்பலப்படுத்தி நிற்கின்ற நிலையில் தமிழ்மக்கள் தாமே பேராடி விடுதலையை வென்றெடுக்கவேண்டும்.

தமிழீழ மக்களாகிய நீங்கள்தான்- தலைவருக்குப் பக்கபலமாக இருக்கின்ற நீங்கள்தான், பொறுத்ததுபோதும் பொங்கியெழு தலைவா என்று பலமுறை தலைவருக்கு மனுக்கள் கொடுத்துள்ளீர்கள். உங்கள் கருத்துக்களை தலைவர் நிச்சயம் கவனத்தில் எடுத்துக்கொள்வார்.

தலைவர் எந்தநேரத்தில் போருக்கான அழைப்பாகிய அந்த மணியோசையை அடிக்கின்றாரோ அப்போது நாம் அனைவரும் ஒருங்கிணைந்து தலைவரது கரத்தை இறுகப் பற்றிக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இனிநாம் நடத்தப்போகிற யுத்தம் மாதக் கணக்கிலோ, வருடக் கணக்கிலோ இருக்கக் கூடாது. எந்த நேரத்திலும் எந்த சவாலையும் எதிர்கொள்ள தமிழீழக் கடற்படை தயாராகவுள்ளது.

திருகோணமலை துறைமுகமாக இருந்தாலும், காங்கேசன்துறையாக இருந்தாலும், மன்னார் பூநகரி கிளாலி நீரேரி கரையோரங்களாக இருந்தாலும் சரி... எங்களது தமிழீழ கடற்பரப்பில் எமது கடற்படைக்கு எவரும் வேலிபோடமுடியாது. எந்தப் படைவந்தாலும் எதிர்கொள்வோம். எமது கடலில் எங்களது ஆட்சிதான்.

தமிழீழக் கடலில் எமது தலைவர் உருவாக்கிய கடற்படைதான் நிற்கவேண்டும். இன்றைக்குப் பல துணைப்படையினர் பயிற்சி எடுத்துள்ளார்கள் என்றால் எமது பிரதேசத்தை நாம் அடித்தெடுக்கவேண்டும்.

அதற்கு விடுதலைப் புலிகளோடு பக்கபலமாக நிற்கவேண்டும் என்பதுதான். இதற்காக துணைப்படையினர் பயிற்சிகளை எடுத்துக்கொள்கிறார்கள்.

வடமராட்சி கிழக்கிலே 2000க்கு அதிகமான மக்கள் பயிற்சிக்காக முண்டியடித் துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களில் இதுவரை 600 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது என்று விநாயகம் மேலும் தெரிவித்தார். (இ

# பொலிஸாரால் கைது

காலிக்கோட்டையில் அமைந்துள்ள நீதிமன்ற கட்டடத்தொகுதியும் அதனை அண்டிய பகுதிகளையும் வீடியோப் படம் பிடித்த 3 பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

நீதிமன்ற கட்டடத் தொகுதி மற்றும் தெற்குப் பிராந்திய குற்றத்தடுப்புப் பணியகம் தேசிய புலனாய்வுப் பிரிவின் அலுவலகம் பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகம் ஆகியவற்றை இவர்கள் படம் பிடித்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளன. (இ-8)

# காணி கச்சேரி

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க பிரிவில் காணியில்லாதோருக்கு அரச காணிகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

இதற்கான காணிக்கச்சேரி ஒன்று இன்றும் நாளையும் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

வடக்கு - கிழக்கு காணி ஆணையாளர் எஸ்.இரவேந்திரன் கலந்துகொண்டு இக் காணிக்கச்சேரியை நடத்தவுள்ளார்.(அ-35)

# சந்திப்பு

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் இலங்கை வதிவிடப் பிரதிநிதிகள் கிளிநொச்சியில் நேற்று முன்தினம் சந்தித்தனர்.

விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் வதிவிடப்பிரதிநிதியாக இருந்து மாற்றம் பெற்றுச் செல்லும் றிச்சாட் மாவீர் மற்றும் புதிதாகப் பதவியேற்கும் கிறிஜோர் பிராங்ளின் ஆகியோர் கலந்துகொண்டனர்.

புதிய வதிவிட பிரதிநிதி சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அடுத்த ஆண்டு செயற்திட்டங்கள் குறித்து இச்சந்திப்பின்போது தமிழ செல்வனிடம் விளக்கிக் கூறினர். (இ

# 22 சீனப்பிரஜைகள் கைது

திருகோணமலைத்துறைமுகத்தின் அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் அனுமதியின்றி உட்பிரவேசித்த 'ரோலர்' படகு கைப்பற்றப்பட்டதுடன் 22 சீனப்பிரஜைகள் உட்பட 27 பேர் கைதுசெய்யப்பட் டுள்ளனர்.

கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ள இவர்கள் துறைமுகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 5 பேர் இலங்கையர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீன்பிடிப்பதற்கான சட்டரீதியான அனுமதியைப்பெற்றுள்ள இந்த சீனப்பிரஜைகள் இலங்கையில் நிறுவனம் ஒன்றில் தம்மை பதிவுசெய்துகொண்டவர்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-7)

# மகிந்தவின் சிந்தனையே வரவு-செலவுத்திட்டம்

## அமைச்சரவைப் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளீர் மகிந்த ராஜபக்ஷவின் மகிந்தவின் சிந்தனை இம்முறை வரவு - செலவுத்திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் நிமால் சிறிபால டிசில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மகிந்தவின் சிந்தனையில் கூறப்பட்டுள்ள சில விடயங்கள் இந்த வரவு - செலவுத்திட்டத்தில் உள்ளடக்கியுள்ளன. மகிந்தவின் சிந்தனை என்பது அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர் அவரால் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டமாகும். அதாவது நாட்டை கட்டியெழுப்புவதற்காக முன்வைக்கப்பட்டுள்ள செயற்திட்டமாகும்.

செயற்திட்டத்திற்கு தேவையான விடயங்கள் வரவு - செலவுத்திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன. இதனை மகிந்த மேலும் விருத்திசெய்து முன்னெடுத்துச் செல்வார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-8)

# அரசியல் மோசடிகள் இலங்கையில் அதிகரிப்பு

இலங்கை உட்பட பல நாடுகளில் அரசியல் மோசடிகள் அதிகரித்திருப்பதாக ஹொங்ஹொங் பல்கலைக்கழக பேராசிரியர் சி.ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான மோசடிகளை கட்டுப்படுத்தவேண்டும் எனின் லஞ்சஊழல் ஆணைக் குழுவின் விதிகளைப்பலப்படுத்த வேண்டும். அத்துடன் மோசடிகள் தொடர்பான தகவல்கள் வழங்கு வோரை பாதுகாப்பதற்கும் சட்டம் இயற்றப்படவேண்டும் என் றும் அவர் கூறினார். (இ-4)

# பறவைக்காய்ச்சல் பரவினால் ஆண்டொன்றுக்கு ரூ.10 மில்.இழப்பேற்படும்

பறவைக்காய்ச்சல் நோய் இலங்கையில் பரவும் பட்சத்தில் பெரும் பொருளாதார இழப்பை எதிர்கொள்ளநேரிடும் என விலங்கி யல் உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் எச்சரித்துள்ளது. பறவைக்காய்ச்சல் நோய் இலங்கையில் பரவினால் ஆண்டொன் றிற்கு 10 மில்லியன் ரூபாய் இழப்பு ஏற்படும் என இத்திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் எஸ்.கே.ஆர்.அமரசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கோழிப்பண்ணைக் கைத்தொழில் துறையில் செய்யப்பட்டுள்ள முதலீடுகள் சுமார் 8 மில்லியன் ரூபாயாகும்.

இந்த நோயின் தாக்கம் இலங்கையில் பரவும் பட்சத்தில் கோழிப் பண்ணைக் கைத்தொழில் துறை பாதிப்புக்களை எதிர் கொள்ளநேரிடும்.

இதற்கு மேலதிகமாக பறவைக் காய்ச்சல் நோயைக் கட்டுப்படுத் துவதற் கும் தற் காப்பு நடவடிக்கைகளுக்குமென பெருமளவு நிதியை செல விட நேரிடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-7)


## ஹற்றன் நஷனல் வங்கி நடாத்தும் 2005-ம் ஆண்டுக்கான கூடைப்பந்தாட்ட போட்டிகள்

HATTON NATIONAL BANK LIMITED HNB

கழகங்கள் - ஆண்கள் ,பெண்கள்
பாடசாலைகள் - ஆண்கள் ,பெண்கள்

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள், பாடசாலைகள் தங்களது விண்ணப்பங்களை ஹற்றன் நஷ னல் வங்கி யாழ்.கிளையில் சமர்ப்பிக்கும்படி வேண்டுகின் றோம்

விண்ணப்ப இறுதித் திகதி :14.11.2005
அணி ஒழுங்குத் தெரிவு :16.11.2005 மாலை 4.30 மணி
இடம் : ஹற்றன் நஷனல் வங்கி யாழ்.கிளை

அணி ஒழுங்குத் தெரிவின் போது பங்குபற்றும் கழகங்கள், பாடசாலைகளில் இருந்து ஓர் உறுப்பினரை சமுகளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

-முகாமையாளர்.

(C-1828)

## திருமணக்கார் (குளிரூட்டியது) வாடகைக்கு

☆ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
☆ ☆

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத் தம் புதிய (ஆங்கில இலக்கம்கொண்ட) குளிரூட்டிய நவீனகார்கள், சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்கு கிடைக் கும்.



தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை 22, சோமசுந்தரம் அவனியூ சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்
T.P:0777-903090 077-3086939,0777-246117, 077-6018467

(c-9843)

## மனோகரா யாழ்.

யாழ். நகரில் முதன்முறையாக DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்




கா.நேரம் 10.30, 2.30 6.30, 9.30(பு.நே)
சில தினங்கள் மட்டும் மாலை 8.30 காட்சி காண்பிக்கப்படும்

## ராஜா சினிமா

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு யாழ்ப்பாணம்




கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

## நிறைஞ்சனாஸ் யாழ்




கா.நே: 11.00,2.45,6.00 (பு.நே)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.11.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.